Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு +IV
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

G. M. K.
COMMUNICATION
302, Temple Rd, Nallur, Jaffna.
TP:- 021-2223760 FAX:- 021-4591194
♥ IDD ♥ LOCAL ♥ NET 2 PHONE (7/=)
♥ FAX ♥ PHONE CARDS ♥ COMPUTER WORKS
♥ AIR TICKETING ♥ BUS BOOKING

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி - 13 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 15 [28.12.2004] செவ்வாய்க்கிழமை இதழ்:89

## கடற்கொந்தளிப்பால் நாடெங்கும்

# உயிரிழந்தோர் எண்ணிக்கை இருபதாயிரமாக அதிகரிப்பு!




சடலங்களால் நிரம்பி வழியும் மருதங்கேணி வைத்தியசாலை!

(யாழ்ப்பாணம்)

**கடற்கொந்தளிப்பால் நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்குக் கரையோரப் பகுதிகள் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட உயிரிழப்பு சுமார் இருபதாயிரமாக இருக்கலாம் என உத்தியோக பூர்வ மற்ற மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.**

**நேற்றுக்காலை மீட்புப்பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான சடலங்கள் மீட்கப்பட்டன. இதன்மூலம் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மிகவேகமாக அதிகரித்ததை அடுத்தே – இருபதாயிரம் பேர்வரை நாட்டில் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.**

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஆகக் கூடுதலாக - சுமார் 6 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதைவிட திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் மேலும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகக் கருப்படுகிறது.

தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

அதேவேளை தென்பகுதிகளிலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இயற்கையின் சீற்றத்துக்கு 15 புலிகளும் வீரச்சாவு!

(கிளிநொச்சி)

தமிழர் தாயகப் பகுதியில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடற்கொந்தளிப்பினால் விடுதலைப் புலிகளின் தரப்பில் இதுவரை 15 போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர். இதனையே தென்னிலங்கை ஊடகங்கள் கடற்புலிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக உண்மைக்குப் புறம்பான வகையில் செய்திகளை அடிக்கடி வெளியிட்டுவருவதாகவும், எனவே அவர்களின் இந்தச் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையெனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தக் கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகள், சிலரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் விபரம் வருமாறு -

26.12.2004 அன்று யாழ்.நாகர்கோவில் பகுதியில் கடமையில் இருந்த வேளை இயற்கை அனர்த்தத்தின் காரணமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## 1300 பேரின் சடலங்கள் திருகோணமலையில் மீட்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கொந்தளிப்புக் காரணமாக இறந்த 1300 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் 800 சடலங்கள் கிண்ணியாப் பிரதேசத்தில் மட்டும் மீட்கப்பட்டுள்ளன.

இதேசமயம் 1530 பேர் காணமற்போயுள்ளதாகவும் இவர்கள் பெரும்பாலும் மரணமடைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் 220 பேரும, நகரப்பகுதியில் 21 பேரும், நிலாவெளியில் 35 பேரும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 76 பேரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். எனினும் - இறந்தவர்களது எண்ணிக்கை 2000 ஐ விட அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

இதேவேளை திருகோணமலை கோபாலபுரம் கடற் படைக் கட்டளை முகாம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இந்தக் கடற்படைத் தளத்தில் கடமையாற்றிய 150 இற்கும் மேற்பட்ட படைவீரர்களின் நிலைமை தொடர்பாக எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. பெரும்பாலும் இவர்கள் அனைவரும் மரணமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படைமுகாமில் இருந்த பெருந் தொகையான இராணுவ ஆயுத தளபாடங்கள் கடல்நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

அத்துடன், மூதூர் பொலிஸ் நிலையம் முற்றாக கடல்நீரினுள் மூழ்கியுள்ளது. இந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 60 இற்கும் மேற்பட்ட பொலிஸார் என்ன

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கணக்கான படையினரும் கடற்கொந்தளிப்பால் உயிரிழப்பு!

(கொழும்பு)

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பில் நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளிலுள்ள இராணுவ, கடற்படைத் தளங்கள் மற்றும் முகாம்கள் முற்றாக அழிந்துபோனதுடன் நூற்றுக்கணக்கான படையினர் இறந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 79 படையினர் உயிரிழந்திருப்பதாகவும் 200 பேர்வரை காயமடைந்திருப்பதாகவும் நேற்றுமாலை வரை கிடைத்த தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

நாகர்கோவிலில் 7 கடற்படையினரும், மூதூரில் 2 கடற்படையினரும் பலியானதுடன் 7 பேர் காணாமற்போயுள்ளனர்.

இராணுவத்தரப்பில் யாழ்.மாவட்டத்தில் 27 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 197 பேர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இராணுவத் தரப்பில் 15 பேரும் காலியில் ஒருவரும் உயிரிழந்ததாக இராணுவத்தரப்பு தெரிவித்தது.

காணாமற்போனோர் தொகை அதிகமாக இருப்பதால் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதைய கடற்கொந்தளிப்பால் படைத்தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இதில் 38 பேர் பலியானதாகவும் 200 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் கூட்டுப்படைத் தளபதியும் கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கணக்கான சடலங்கள் ஒரே புதைகுழியில் அடக்கம்!

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணிப் பகுதியில் நேற்று மீட்கப்பட்ட 500 சடலங்கள் உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள வெளிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டு வருகின்றன.

மீட்கப்பட்ட சடலங்கள் சிதைவடைந்து உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாலும், இந்தப் பகுதியிலுள்ள மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளமையாலும் சடலங்களை இனங்காண முடியாத நிலையில், அனைத்துச் சடலங்களும் புகைப்படம் எடுக்கப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்கள் அந்தந்த இடங்களிலேயே புதைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பளை, கிளிநொச்சி, பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலங்கள், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களாலும், மீட்பு பணியாளர்களாலும் புதைக்கப்பட்டு வருகின்றன.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் இதுவரை மீட்கப்படாதுள்ளன. நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் செம்பியன்பற்று பாடசாலையை அண்டிய பகுதியில் மூன்று வயது மதிக்கத்தக்க சிறுமியின் சடலம் மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்டு புதைக்கப்பட்டது.

மீட்பு பணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், தமிழீழ விளையாட்டுத்துறையினர், பொது அமைப்பு பிரதிநிதிகள், (12 ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு கல்லடியில் ஹைஏஸ் வானுடன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பனை மரம் ஒன்றை அணைத்திருந்து உயிர்தப்பிய சிறுமி.

## சுமாத்திரா தீவில் மீண்டும் நில நடுக்கம்

இந்தோனேஷிய - சுமாத்திரா தீவில் நேற்று மீண்டும் இரண்டு புவியதிர்வுகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இலங்கையின் கடலோரப் பகுதிகளில் கடற்கொந்தளிப்பு ஏற்படலாமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை சுமார் 25 அதிர்வுகள் இடம்பெற்றுள்ளதால், இந்த அபாயம் முற்றாக நீங்கிவிட்டதாகக் கருதமுடியாதென வானிலை அவதானநிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனவே கடற்கரையிலுள்ளவர்களை 1000 மீற்றருக்கு அப்பால் இடம்பெயருமாறும், அங்கு அவதானத்துடன் இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## இராணுவ சிப்பாய் புலிகளால் மீட்பு!



வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கரையேறியிருந்த சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் மீட்டு, அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

கல்லடி படைமுகாமைச் சேர்ந்த ஏ.டி. வசந்த என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு ஒப் படைக்கப்பட்டவராவார்.

இதேவேளை, கடல் பெருக்கெடுத்ததால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு படைத் தரப்பு வருவதற்கு புலிகள் அனுமதி வழங்கியிருந்தனர்.

# வடமராட்சிப் பகுதியில் இதுவரை 87 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன!

வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரனர்த்தத்தால் உயிரிழந்தவர்களில் 87 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மந்திகை அரச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த 87 சடலங்கள் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. நேற்று மாலை மணற்காட்டுப் பகுதியிலிருந்து எடுத்துவரப்பட்ட 6 சடலங்கள் அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலை பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளன. இறந்தவர்களின் சடலங்களைத் தேடும் பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட சடலங்களின் விபரம் வருமாறு -

சிவப்பிரகாசம் - சிவானந்தம் (65) தொண்டமனாறு, பாலேந்திரராசா - வசந்தராஜா (18) கெருடாவில் - தொண்டமனாறு, அந்திரஸ் ஆரோக்கியநாதன் எட்விட் (40), ஞானப்பிரகாசம் - பிரான்சிஸ் சத்தியசீலன் (31) மணற்காடு, வரப்பிரகாசம் - பிரான்சிஸ் அம்மா (57), நவரட்ணம் - றொன்திகா (12) தும்பளை கிழக்கு, வடிவேலு - நவரட்ணம் (58) அல்வாய் வடக்கு இன்பருட்டி, வின்சன்ராசகுமார் - மேரிரெக்சனா (03) அல்வாய் வடக்கு இன்பருட்டி, குணரத்தினம் - சரஸ்வதி (75) தும்பளை கிழக்கு, பருத்தித்துறை, சின்னத்தம்பி - மீனாட்சி (08) தும்பளை கிழக்கு பருத்தித்துறை, கண்ணதாசன் - நிதர்ஸன் (10) தும்பளை கிழக்கு பருத்தித்துறை, அகிலதாஸன் - இருதயதாஸ் (38) தும்பளை கிழக்கு - பருத்தித்துறை, வர்ணகுலசிங்கம் - ஜெயந்தி (42) மணற்காடு - குடத்தனை, வர்ணகுலசிங்கம் - ஜெல்னா (06) மணற்காடு - குடத்தனை, யாகப்பு - மேரிமர்னா (22) மணற்காடு - குடத்தனை, மரியம்மாபிள்ளை மேரிமர்னா (22) மணற்காடு - குடத்தனை மரியம்மா பிள்ளை மேரியப்பு லோனா (48), மணற்காடு- குடத்தனை, ஆரோக்கியநாதன் எட்வேட் (37) மணற்காடு, குடத்தனை, எட்வேட் சாதுரியா (02) மணற்காடு - குடத்தனை, எட்வேட்- பேபியம்மா (36) மணற்காடு - குடத்தனை, சுநேந்திரன் - சுகிர்தன் (02) தும்பளை கிழக்கு பருத்தித்துறை, நிக்கிலஸ் - அந்தோனி உதயசீலி (10) மணற்காடு குடத்தனை, அடைக்கலம் - ஜோச் (39) மணற்காடு - குடதனை, யோசப பெர்ணாண்டோ - சிந்துயா (08) கடற்கரை வீதி, பருத்தித்துறை, பொனராசா - இன்பம் (38) மணற்காடு -குடத்தனை, இமானுவேல் - ரஜீவன் (16) மணற்காடு- குடத்தனை, சிங்கர் - பிலிப்பையா (75) மணற்காடு - குடத்தனை, மதியழகன் - பேபி துஷ்யந்தி (02) மணற்காடு - குடத்தனை, திருச்செல்வம் - ரூபா (19) மணற்காடு - குடத்தனை, அன்ரன் சேவியர் - மரியகெறிற்ரா (34) மணற்காடு - குடத்தனை, பேதுருப்பிள்ளை - மலர் (60) மணற்காடு - குடத்தனை, ஜோசப் - சிவமாலையம்மா (80) மணற்காடு - குடத்தனை, பன்னீர்ச்செல்வம் - மேரியுனெஸ்ரா (08) மணற்காடு - குடத்தனை (35) அடைக்கலம் - தூசிண்டன் (40) மணற்காடு- குடத்தனை, அடைக்கலம் - பாவா (25) மணற்காடு - குடத்தனை, விஷ்வநாதன் - விதுஷா (02) மணற்காடு- குடத்தனை, திருச்செல்வம் - அமரஉந்தி (43) மணற்காடு - குடத்தனை, எட்மன்ராசா - கபில்ஜெயராஜ் (10) மணற்காடு - குடத்தனை, பீற்றர் அருள்தாஸ் (29) மணற்காடு- குடத்தனை, றோ. அருள்தாஸ் - டிலானி (03) மணற்காடு - குடத்தனை, அருள்தாஸ் - றோமிலா (01) மணற்காடு - குடத்தனை, யோசப - எலிசபெத் (67) மணற்காடு - குடத்தனை, செபஸ்ரியன்பிள்ளை நிறோக்கினி (08 மாதம்) மணற்காடு - குடத்தனை, அல்பிறட் யோஜ் நிலோஜன் (3) சக்கோட்டை, எட்மன்ராசா தரன் (5) மணற்காடு, ஞானப்பிரகாசம் செபமாலையம்மா (60) மணற்காடு, வைத்தி அந்தோனி முத்து மரியாயிநேசம்மா (50) மணற்காடு. (12) (14)

## உயிரிழந்தவரின் குடும்பங்களுக்கு மரணச் செலவுகளுக்கு ரூ.2000!

இயற்கை அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு யாழ்.செயலகத்தால் மரணச் செலவுக்கென இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டுவருகிறது.

நேற்றுமுன்தினம் வடமராட்சியில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் குறித்து நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான உயர்மட்டச் சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து நேற்று மந்திகை வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட விசேட கருமபீடத்தில் வைத்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இயற்கை அனர்த்தத்தின்போது உயிரிழந்த ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் பிரதேச செயலக அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வழங்கி வருகின்றனர்.

## அவசர சந்திப்பு!

யா/ யூனியன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கான அவசர சந்திப்பொன்று இன்று காலை 10.00 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து ஆசிரியர்களையும், மாணவர் தலைவர்களையும், தரம் 10, தரம் 11, க.பொ.த. உயர்தர மாணவர்களையும் அண்மையில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிய மாணவர்களையும், சாரணர்களையும், வழிகாட்டிகளையும் பாடசாலையில் கூடுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## மத்திய கல்லூரியின் கழகங்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் இன்ரறக் கழகம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைக் கழகம் மற்றும் மாணவ முதல்வர் சபை உறுப்பினர்களையும் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் இன்று மாலை 2 மணிக்கு கல்லூரி வருமாறு அதிபர் க.இராசதுரை தெரிவித்தார்.

முல்லைத்தீவு, வடமராட்சி மற்றும் ஏனைய பகுதிகளில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## நெடுந்தீவில் துக்கதினம்!

வடகிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரனர்த்தத்தின்போது உயிரிழந்த மக்களுக்கு புங்குடுதீவில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம், வடமராட்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி ஆகிய பகுதிகளில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. புங்குடுதீவிலுள்ள வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டும், ஒலிபெருக்கி மூலம் சோககீதம் இசைத்தும் மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

யாழ்.மாவட்ட தென்னிந்தியத் திருச்சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## அவசர கலந்துரையாடல்!

பீண்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறி பயின்ற, பயிலுகின்ற மாணவர்கள் அனைவரையும், இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிப்புக்குள்ளான மக்களுக்கும், சக மாணவர்களுக்கும் உதவுவது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் இன்று மு.ப.10. மணியளவில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மீண்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா மாணவர் மன்றம் தெரிவித்துள்ளது.

## இரண்டு மணிநேரத்தில் மட்டும் நூறு சடலங்களை மீட்டோம்!

### கேணல் சூசை தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு, செல்வபுரம், மணல் குடியிருப்பு, தீர்த்தக்கரை, புள்ளி வாய்க்கால், மாத்தனை இந்தப் பகுதிகளில் கிட்டத்தட்ட ஒருகிலோ மீற்றர் அளவிற்கு கடல் நீர் உட்புகுந்துள்ளது. குறிப்பாக கள்ளப்பாடு என்ற இடத்தில் 1000 பேர் காணாமற் போயுள்ளதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

இந்த அனர்த்தம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஒட்டுமொத்தமாக மணல் குடியிருப்பு, செல்வபுரம், வட்டு வாகல், கள்ளப்பாடு ஆகிய பகுதிகளில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பாடசாலைக் கட்டடங்கள், தேவாலயங்கள், அரச திணைக்களக் கட்டடங்கள் முழுவதும் முல்லைத்தீவு நகரப்பகுதியில்தான் இருந்தது. அவ்வளவு கட்டடங்களும் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் மட்டும் 600 சடலங்கள் மீட்டகப்பட்டன. நேற்றுக் காலை 7 மணிக்கு மீட்புப்பணி ஆரம்பிக்கப்பட்டு காலை 9 மணிவரையான இரண்டு மணித்தியாலத்திற்கிடையில் 100 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இந்த மீட்புப் பணியில் எமது படையணியின் ஒரு பற்றாலியனைக் கொண்டுவந்து இறக்கியுள்ளோம். அவர்கள் இந்த மீட்புப் பணியை முழுமையாக செய்துகொண்டிருக்கின்றார்கள். இந்த மீட்புப் பணியில் கள்ளப்பாடு சிலாவத்தை போன்ற பிரதேசங்களில் அந்த கிராமத்தினுடைய கிராம சேவையாளருடன் இரண்டு மூன்று பேரை கூடுதலாக அமர்த்தியுள்ளோம். எங்களுடைய முழுப் போராளிகளுக்கும் இடங்கள் முழுமையாகத் தெரியாது. ஆனாலும் கிட்டத்தட்ட 750 பேர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மீட்புப் பணி இடம்பெறும் பகுதிகளில் நிர்க்கதியற்று இருக்கும் மக்களுக்கு நிவாரணப் பணியை மேற்கொள்வதற்கு யாரும் இது வரையில் முன்வரவில்லை.

இநத இடங்களுக்கு கண்காணிப்புக்குழுவோ, அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச ஊடகங்களோ முன்வரவில்லை. இதனால் இந்தத் தகவல்கள் ஒன்றும் வெளியுலகிற்குப் போகவில்லை.

இது சம்பந்தமான தகவல்களை வெளியில் கொண்டுவருவதாக இருந்தால் முல்லைத்தீவுக்கோ வடமராட்சி கிழக்கிற்கோ நேரடியாக வரலாம்.

அதாவது சர்வதேச ஊடகங்கள் கிளிநொச்சி அரசியற்துறை பணிமனை ஊடாக நேரடியாக வந்து வெளியுலகிற்கு இந்த அனர்த்தங்களை வெளிப்படுத்தலாம். மீட்புப் பணி நடைபெறும் பகுதிகளில் எவ்வித தொலைபேசி வசதிகளும் இல்லை. எனவே செய்மதித் தொலைபேசிகளைக் கொண்டு வந்து இவர்களை வெளியுலகிற்கு எடுத்துச் செல்வதில் எவ்வித பிரச்சினையுமில்லை.

இதுபோலவே முல்லைத்தீவிற்கும் நகர்மத்திக்கு வந்து வரலாம். முல்லைத்தீவு நகரத்திற்கான சகல பாதைகளும் மூடப்பட்டுள்ள நிலையில் தற்போது இடிந்த கட்டடங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.(22)

## தப்பிவந்த சிறுவன் மீசாலையில்!

(சாவகச்சேரி)

கடற்கொந்தளிப்பால் இடம் பெயர்ந்து பெற்றோரை இழந்த சிறுவன் ஒருவன் மீசாலை - புத்தூர்ச் சந்தியிலுள்ள ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுவன் பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்தவர் என்றும், சிறுவன் தனது அம்மம்மாவுடன் வாழ்ந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தனது பெயர் செல்லத்துரை ஜெயசீலன் வயது (10) எனவும் இந்தச் சிறுவன் தெரிவித்துள்ளான்.

மேற்படி சிறுவனைத் தேடுவோர் பொ.செல்வரத்தினம், சியாமளாமில் அருகாமை, மீசாலை வடக்கு, மீசாலை என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு சிறுவனை மீட்டுக் கொள்ளுமாறு பாதுகாவலர் தெரிவித்துள்ளார். (25)

## வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பருவ மழை தீவிரமாகலாம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் பருவ மழை தீவிரமாகலாம் என்றும் மத்திய கிழக்கு, ஊவா, வடக்கு, வட மத்திய மாகாணங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழையுடன் கூடிய காற்றும் வீசலாமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மன்னார், திருகோணமலை, அம்பாந்தோட்டையில் கடல் கொந்தளிப்பு காணப்படும்.

நேற்றைய நில நடுக்கத்தின் பின்னர் கடல் எல்லைகளில் சிறிய நில அதிர்ச்சி காணப்பட்டதாக புவியியல் மதிப்பீட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கரையோரப் பகுதியில் வாழும் மக்கள் அதிகம் அச்சம் கொள்ளாமல், ஆனால் விழிப்புணர்வுடன் இருக்கும்படி வளிமண்டலத் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கின் அவலக்காட்சிகள்




















# இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட 2005 பேர் தென்மராட்சியில் தஞ்சம்!

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த 496 குடும்பங்களைச் சேர்ந்த 2005 பேர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 6 பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

டிறிபேக் கல்லூரியில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேரும், மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 225 பேரும், வரணி மகாவித்தியாலயத்தில் 274 குடும்பங்களைச் சேர்ந்த 1145 பேரும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேரும் -

இடைக்குறிச்சி ஸ்ரீ சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 242 பேரும், இடைக்குறிச்சி கிறிஸ்தவ தேவாலயத்தில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 230 பேருமாக -

மொத்தம் 496 குடும்பங்களைச் சேர்ந்த 2005 பேர் தங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 150 பேர் கைக் குழந்தைகளாகும். இவர்களுக்கு வழங்குவதற்கு லக்டோஜன் பால் மாவும், ஏனையோர்களுக்கு கோதுமை மாவும் தேவையாகவுள்ளதெனவும், வரணி மகாவித்தியாலயத்தில் உள்ளவர்களுக்கு 5 தற்காலிக மலகூடம் அமைக்கவேண்டியுள்ளதாகவும் தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் சுமார் 250 பேர் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலும், 50 பேர்வரை சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய உடனடி நிவாரணத் தேவைகளை மட்டுவில் பகுதி பொது அமைப்புக்களும், கிராம அலுவலரும் இணைந்து பூர்த்திசெய்தனர்.

சமைத்த உணவுகள், உடுபுடவைகள், பாய்கள், பால்மாக்கள், என்பனவும் மட்டுவில் சரசாலைப் பகுதி பொதுமக்களின் உதவியுடன் வழங்கப்பட்டன.

மேலும் குருநகர், பாஷையூர் பகுதி பொதுமக்களாலும் உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டன. இது தவிர சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் என்பவற்றிலும் பெருமளவு மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களைக் கணக்கெடுத்துத் தேவையான உதவிகள் மற்றும் நிவாரணங்கள் வழங்குவதில் தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் துரித நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(24) (25)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாநகரசபையும் உதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தாக்கிய ‘சுனாமி’ கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, யாழ்ப்பாணம் மாநகரசபை நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவருவதாக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் தங்களது ஒருநாள் சம்பளத்தை இந்த நிவாரணத்திற்காக வழங்கியுள்ளனர். அவற்றைவிட, யாழ்ப்பாண மாநகரசபையில் இயங்குகின்ற தொழிற்சங்கங்களான, பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க பொது (சிற்) ஊழியர் சங்கம், வடக்கு - கிழக்கு மாகாண ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் என்பவற்றோடு யாழ்.மாநகர சபை நலன்புரிச்சங்கம், யாழ்.மாநகர சபை சுகாதாரப்பகுதி நலன்புரிச் சங்கம், யாழ்.மாநகரசபை சைவ சமய விவகாரக்குழு என்பனவும் இணைந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை பருத்தித்துறை, கரவெட்டி, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளுக்கு நேற்று அனுப்பியது.

இந்த உலர் உணவில் அரிசி, சீனி, பருப்பு, பால்மா வகைகள், பிஸ்கற்றுக்கள் என்பன அடங்கியுள்ளதாகவும் - பளை, கரவெட்டி ஆகிய பகுதிகளுக்கு மாநகர சபையின் இரண்டு தண்ணீர் பவுசர்களையும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உதவி வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புற்று இடம்பெயர் முகாம்களில் இன்னலுறும் மக்களுக்கு உதவும் முகமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் அனைத்துப் பொருட்களும் சேகரிக்கப்படுகின்றன.

இவற்றை வழங்க முன்வரும் நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள், ஏனைய பொதுமக்கள் அனைவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளை, 73 கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# முக்கிய அறிவித்தல்

வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி. பாஸ்கரன்
வ. பி. பா. ஊ. கூ. சங்கம்
பரந்தன், கிளிநொச்சி.

(C/2895)

செயலாளர்
க. சி. மணியம்
வ. பி. பா. ஊ கூ. சங்கம்
பரந்தன், கிளிநொச்சி.


A/L - 2007
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி - 8
காலை 8 மணிக்கு
DMI
யாழ். நகர்
C/3504

நிறைஞ்சனாஸ் சங்கானை
தனுஷ், தியா நடித்த
ட்ரிம்ஸ்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
THE MUMMY RETURNS

ராஜா யாழ்ப்பாணம்.
அர்ஜுன், ரீமாசென்,
வடிவேல், தேவயானி, பிரகாஸ்ராஜ்
நடித்த
கிரி
(ரீல்ஸ்)
(இயக்கம் சுந்தர்C)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த விஷ்வதுளசி
'காட்சி நேரம் 10.30 (பு.நே) மட்டும்
நிதியுதவிக்கான காட்சி 1.1.2005
உலகம் சுற்றும் வாலிபன்
(ரீல்ஸ்)
குறிப்பு:- இக்காட்சிமூலம் வசூலிக்கப்படும் நிதி முழுவதும் வடக்கு - கிழக்கு வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாகவே நடைபெறுகிறது.
காட்சி நேரம்-10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும்
இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்),
சாயாசிங்,
லைலா,
வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடின் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்


# கண்ணீர் அஞ்சலி

26.12.2004 ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்சீற்றத்தில்
யா/கற்கோவளம்
மெ.மி.பாடசாலையில்
தரம் VI இல் கல்விகற்ற

## கோபால் நவநீதன்

அகாலமரணம் அடைந்த செய்தி அறிந்து பாடசாலைச் சமூகம் பரிதவிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கற்கோவளம் மெ.மி.பாடசாலை,
பருத்தித்துறை.

(சி-3536)

# மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் எமது உடன் பிறப்புக்களிற்கு உதவிக்கரம் நீட்டுமுகமாக IIS சமூகத்தினரால் விசேட ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. எனவே, இது தொடர்பான மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று 29. 12. 2004 காலை 10 மணிக்கு IIS பிரதான மண்டபத்தில் இடம் பெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.

(சி-3535)


UNIT
இந்தியப் பொறியியலாளர்களின் மேற்பார்வையில்
சலுகையிலுள்ள கணனித் தொகுதிகள்
UNI MULTIMED with DELL Monitor - 49,900/-
UNI DEV EXPERT with DELL Monitor - 66,900/-
UNI ULTRA - SATA EXPERT with DELL Monitor - 89,900/-
Free..! Higher End Auto Shutdown UPS. Hi-quality 2.1 Higher-End Woofer, Screen Filter, Mouse Pad, Dust Cover & etc.
வூபர்கள் 1500 ரூபா முதல்
X-MAS & NYEAR MEGA OFFER
UNI ULTRA - SATA COMPLETE with DELL Monitor 109,900/- Free..! GEEPAS 5.1 3800W HI-FI Woofer
தரம் சிறந்ததால்தான் 3 வருட உத்தரவாதம்
மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி / நேரில்
All System With......!
* All Mother Board are Hyper Thread Supported
* All System With 1024 Cache Memory
* Fashioned ATX Casing Along with Front USB and Sound
* 5.1 Channell Surround Sound System
* 8X AGPVGA, 8XUSB 2.0 ports
* Enhanced Multimedia Keyboard
* 100 Mbps Fast Ethernet NIC
OFFER
சகல வன்பொருள்களுக்கும் 3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
யாவும் கொழும்பை ஒத்த விலையில்

| | | OFFER |
|---|---|---|
| Keyboard with Mouse | 850/- | 750/- |
| Woofer SP-299 | 4500/- | 3500/- |
| Woofer MS-220AB | 2500/- | 1750/- |
| GPASS 5.1 Woofer | 12500/- | 10500/- |
| Power Supply ATX 400W | 2000/- | 1700/- |
| Mouse | 300/- | 260/- |
| Optical Mouse | 700/- | 625/- |
| Optical Mouse | 1400/- | 1100/- |

சகல விதமான Memory, Hard Disk, UPS, Processor, VGA Card, Mother Board, CD ROM, Writer, Floppy Drive, PIII Mother Board, DVD ROM, Head Phones, Blank CDs, Internal & External modem, TV Tuner, Net work Switches & Cables, Screen Filters, Cooling Fans, Sound cards, Printers, Scanner & Web Cam மற்றும் கண்ணைக் கவரும் Casing மற்றும் இதர பொருட்களுக்கும்
இதேபோன்ற சலுகை விலையில்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.
Universal Technology (Pvt.) Ltd. Station Road, Chunnakam.
MOB:- 077 3134737, 077 3134725, 077 6093477. (C/2834)

# உதவிப் பணிகளில் ஈடுபடுமாறு யாழ். ஆயர் அவசர வேண்டுகோள்

சற்றும் எதிர்பாராத விதமாக நடந்த இயற்கை அனர்த்தத்தினால் நடந்த கொடூரம் பற்றி அறிந்து, அதிர்ச்சியும் வேதனையும் அடைவதாக யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தேசிய இயற்கை அனர்த்தமாக இலங்கையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, பல ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டுள்ளது. இதில் கணிசமான தமிழ் மக்கள் இறந்து போயுள்ளமை இன்னும் வேதனையை அதிகமாக்குகிறது.

இலங்கையில் மட்டுமல்லாது ஆசியா முழுவதிலும் நடந்த இந்த அழிவுகளுக்காக எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஆன்மா இறைவனில் அமைதி அடையவேண்டுகின்றோம்.

உயிர்களையும், உடமைகளையும் இழந்து யாருமற்ற நிலையில் அகதிகளாகவும், அநாதைகளாகவும் இருப்போரின் துன்பத்தில் கலந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நடந்து முடிந்தவற்றை இறைசித்தமென மனஉறுதியுடன் ஏற்கும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகிறோம். இனியும் இது போன்ற நிகழவு நடைபெறாமல் இருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

கிறிஸ்மஸ் புதுவருட திருவிழாக் காலத்தில் நடந்த இந்த நிகழ்வு, எம்மை எல்லாம் அதிர்ச்சிப படுத்தியுள்ளது. இந்தக் காலத்தில் நாம் எல்லோரும் எமது நல்ல மனதையும், மனிதாபிமானத்தையும், உதவும் பண்பையும் காட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்.

கொண்டாட்டங்களைக் குறைத்து பரிசில்கள், வாழ்த்து மடல்கள், கைலி சேடங்கள் என்பவற்றை எல்லாம் துன்பப்படுவோருக்கு உதவ அன்பளிப்பாக வழங்குவோம். எம்மால் இயன்ற பொருள் உதவிகளையும், பண உதவிகளையும், சரீர உதவிகளையும் வழங்குவோம்.

தாராளமான உதவிப்பணிகளைச் செய்யும்படி பதவிகளில் இருப்போரையும் மனிதாபிமானப் பணி புரியும்படி அனைத்து மக்களுக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உடனடி மீட்புப்பணிகளில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளையும், தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினரையும் பாராட்டுகிறோம். திடீர் உதவி இரத்ததானம் போன்ற பணிகளில் ஈடுபடும்படி குறிப்பாக இளைஞர்களுக்கு வேண்டுகிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் கடற் கொந்தளிப்பால் நெடுந்தீவில் மக்கள் இடம்பெயர்வு

(நெடுந்தீவு)

கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக நெடுந்தீவு கரையோரப் பகுதிகளிலுள்ள கடல்நீர் உட்புகுந்தமையினால், சுமார் 150 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நெடுந்தீவு மத்திய பகுதியில் அமைந்துள்ள றோ.க. மகளிர் கல்லூரியில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்கள் செறிந்துள்ள செமநாயகபுரம் முதல் காளாமுனை வரையான கரையோரப் பகுதி யில் இருந்த மக்களே தங்கள் இருப்பிடங்களை விட்டுச் சென்றுகல்லூரியில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஏற்பாட்டில் கிராம அலுவலர்கள், பணிமனை ஊழியர்கள், நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் பொது அமைப்புக்கள் வழங்கிவருகின்றனர்.

கரையோரப் பகுதி மக்களது வீடுகளுக்குள் நீர் புகுந்துள்ளதுடன், கால்வாய்களுக்குள்ளும் நீர் தேங்கியுள்ளது. இதேவேளை, பொதுமக்கள் எவருக்கும் எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் தரித்துநின்ற குமுதினிப் படகு, கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட நீர் மட்ட தாழ்வினால் பாலத்தில் தூக்கி வைத்து பின்னர் நீர்மட்ட உயர்வினால் கடலில் விடப்பட்டுள்ளது.

இதேவேளை, காலை நேர படகுசேவை எந்தவிதமதான இடையூறுமின்றி இடம்பெற்றபோதும், மாலைநேர சேவை இடம்பெற வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

# நல்லூர் சங்கிலியன் மன்றத்தினரும் உதவிப் பணிகள் சேகரிப்பில்!

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து கோவில்களிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு உணவுப்பொருட்கள், உடைகள், மருந்து வகைகள என்பவற்றைச் சேகரிக்கும் பணியில் நல்லூர் சங்கிலியன் மன்ற இளைஞர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்புவோர் இன்று காலை 10 மணிக்கு முன்னர், நல்லூர் சங்கிலியன் கலையரங்கில் ஒப்படைக்குமாறு சங்கிலியன் மன்ற இளைஞர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்புவோரிடம் அவரச அழைப்பை விடுத்துள்ளனர்.

இவவாறு சேகரிக்கப்படும் பொருட்கள் பருத்தித்துறை, நாகர்கோவில், தாளையடி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நல்லூர் அரசியல் துறையினர் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சங்கிலியன் மன்றத்தினர் தெரிவித்தனர். (90)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒளி விழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நத்தார் செய்திகளை தென்னிந்திய திருச்சபையின் நவாலி ஆலயக்குருவண. ஆனந்தன் அடிகளாரும், ஆசிச் செய்தியை மானிப்பாய் அந்தோனியார் ஆலய அருட்தந்தை பெனற் அடிகளாரும் வழங்கிச் சிறப்பிக்கவுள்ளனர். (44)

# வெள்ளவாய்க்கால் அமைத்துத் தருமாறு சாவற்கட்டு பிரதேச மக்கள் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

சாவற்கட்டு பிரதேசத்தில் வெள்ள நீர் வழிந்தோடுவதற்குரிய வெள்ள வாய்க்கால் வெட்டுவதற்கு, எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனையிட்டு இந்தப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக சாவற்கட்டைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளில் வசிக்க முடியாமல் இடம்பெயர்ந்து, வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பரதேச செயலர், இந்தப் பகுதி கிராம அலுவலர், மானிப்பாய் பிரதேச சபையினர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு வெள்ள வாய்க்கால் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், வெள்ள நிவாரணம் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது. எனினும், இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், இந்தப் பகுதி மக்களின் சகல செயற்பாடுகளும் தடைப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு வெள்ள வாய்க்கால் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (44)

# உதவிப் பொருட்களை வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இயற்கையனர்த்தத்தால் ஏற்பட்ட கொடுமையான அழிவுகளினுள் சிக்கித் தவிக்கும் மக்களுக்கான அவசரமானதும், உடனடியானதுமான உதவிகளை றீடோ நிறுவனம் மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு தேவையான உடனடித் தேவைகளான - உடுபுடவைகள் மற்றும் உலர் உணவுகள் றீடோ நிறுவன உதவிப் பொருட்கள் சேகரிப்போரிடம் அல்லது ஞானவீர சனசமூக நிலையம், ரயில்நிலைய வீதி, கோண்டாவில், றீடோ நிறுவன யாழ்.மாவட்ட அலுவலகம், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, கே,எல்.தொலைத் தொடர்பகம் சண்டிலிப்பாய்ச் சந்தி ஆகியவற்றில் கொடுத்துதவுமாறு றீடோ நிறுவனம் கேட்டுள்ளது.

# இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா ஈழத்தமிழ் அன்பர் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பு

இயற்கையின் சீற்றத்தால் பேரழிவுக்குள்ளான தமிழர் தாயகத்தின், பெரும் பாதிப்புக்குள்ளாகி நிக்கதியாகி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, உடை உட்பட இதர வசதிகளை வழங்கி, தமிழர் புனர்வாழவுக் கழகம் பராமரித்து வருகிறது.

அனைத்து உடமைகளையும் இழந்து ஏதிலியாக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவதற்கென, தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் இருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும், சமூக அமைப்புக்களாலும், வர்த்தக நிலையங்களாலும், மக்களாலும் உணவில்லாத பொருட்கள் பெருமளவில் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அந்தந்த மாவட்டச் செயலகங்களாலும், பங்காளி நிறுவனங்களாலும் இந்த உதவிப் பொருட்கள் வந்து குவிந்தவண்ணம் உள்ளன.

கிடைக்கப்பெற்ற பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனுக்குடன் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு வழங்கிப் பராமரித்து வருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிபபொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு, கனடா வாழ் ஈழத்தமிழ் அன்பா ஒருவர் - ஒரு லட்சம் ரூபா பணத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதியிடன் கையளித்துள்ளார்.

அழகரட்ணம் ஜெயமணி என்ற அனபரே இந்தப் பணத்தினை அன்பளிப்பாக நேற்றுக் காலை வழங்கினார். இதைவிட தட்டுவன் கொட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் 10 ஆயிரம் ரூபா பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தினால் பேரவலம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனைவரதும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டி நிற்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள் வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் துன்பப்பட்ட மக்களோடு மக்களாக நின்று உதவி வருகின்றதைக் காணமுடிகின்றது.

பேரழிவுக்குள்ளான பிரதேசங்களில் மக்களைப் பாதுகாப்பாக மீட்பதில் இருந்து, முகாம்களில் தங்கவைத்து சமைத்த உணவு வழங்கி, இதரப் பொருட்கள் வழங்கியும் பராமரிப்பதுவரை தமிழர் புனர்வாழ்வு கழகத் தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புற்றளை சனசமூகநிலையத்தை விரைவில் புனரமைக்க கோரிக்கை

தென்புலோலி - புற்றளை சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மிகவும் பழமை வாய்ந்த இந்தக் கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டுவதற்கான முயற்சியில் கட்டடம் இடிக்கப்பட்டது. ஆனால், மீள்கட்டுமானப் பணிகள் மிக மந்தகதியிலேயே இடம்பெற்று வருகிறது.

இந்தச் சனசமூக நிலைய நூலகம் தற்காலிகமாக அருகில் இயங்கி வருகிறது. எனவே, இதனை உடனடியாகப் புனரமைத்து, நூலகத்தை மிகச் சிறந்த முறையில் மக்கள் பாவனைக்கு விடவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க அமெரிக்க தூதரகம் உறுதியளிப்பு!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் நாட்டில் ஏற்படட பூமி அதிர்ச்சி காரணமாக - கடல கொந்தளிப்பால், இலங்கை வாழ் கரையோரப்பகுதி மக்களுக்கு, குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு ஏற்பட்ட பாரிய அனர்த்தங்கள், அழிவுகள், உடனடியாகத் தேவையான மனிதாபிமான உதவிகள், தேவைகள் பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்று காலை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் சந்திப்பை ஏற்படுத்தி, எடுத்துரைத்தார். இந்தவகையில், அவரது கோரிக்கைகள், மக்களுக்கு தேவையான உதவிகள், தூதரக அதிகாரிகளால் ஏற்பட்டு, உதவிக்கான அவசர நடவடிக்கை எடுக்க உறுதி அளிக்கப்பட்டு, அமெரிக்க தூதரக அதிகாரிகளது அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் -

இயற்கையின் சீற்றத்தால், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, வீடிழந்து, சொத்திழந்து, உற்றார் உறவினர் இழந்து ஏதிலிகளாய், பொது இடங்களிலும், வீதியோரங்களிலும் , செய்வதறியாது துயருறும் பாதிககப்பட்ட மக்களுக்கு அமைப்புக்களும், மக்களும் தேவையான உதவிகளை விரைவாகவும் உணர்வுபூர்வமாகவும் செய்யும்படி அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாதிக்கப்பட்டோருக்கு உதவ துயர் துடைப்பு நிதியம்!

இந்து சமுத்திரத்தில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களின், குடும்பங்களின் துயர்துடைக்கும் பணிக்கான நிதியம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை நல்லூர் ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கி திருநெல்வேலி, கணக்கு இலக்கம் 11719 இல் ஆரம்பித்துள்ளது.

உதவிபுரிவோர், நல்மனம் படைத்தோர், அரச , அரச சார்பற்ற, கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்கள் இந்த நிதிய கணக்கிலக்கத்துக்கு அல்லது நேரடியாகத் தங்கள் பகுதியிலுள்ள தேசிய எழுச்சிப்பேரவை செயலகத்தில் ஒப்படைத்து, பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ். மாவட்ட செயலாளர் சொலமன் சூ. சிறில் வேண்டுகோள் விடுத்துள்ளாா.

✹ இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் -

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் உதவும் கரங்கள் என்ற திட்டத்தினூடாக நிதி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன.

நேரடியாக உதவ விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வந்து உதவிகளைச் செய்யலாம்.

நிதி உதவி செய்யவிரும்புவோர் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் உள்ள 60044 என்ற கணக்கு இலக்கத்துக்குப் பணத்தை அனுப்பிவைக்கலாம் என மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் கேட்டுள்ளார்.

✹ யுத்த அனர்த்தங்களினால் ஏற்கனவே சொல்லொணாத் துன்பங்களையும், இழப்புக்களையும் சந்தித்து அதிலிருந்து மீளமுன், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட எதிர்பாராத இழப்புக்களுக்கும், துன்பியல் நிகழ்வுகளுக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து இணையம் தெரிவித்துள்ள செய்திக்குறிப்பில் -

சகல நிறுவனங்களையும் பாதிப்புக்குள்ளாகி ஆதரவற்றிருக்கும் எம் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தம்மாலான சகல உதவிகளையும், வழங்க முன்வருமாறு அன்புக்கரங்கள் நீட்டி அழைக்கின்றோம். சகல உள்ளுர், தேசிய சர்வதேச நிறுவனங்களையும் இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இணையக் காரியாலயத்தில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும் கலந்துரையாடலில் உடனடியாகக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அக்குப் பஞ்சர் சிகிச்சை முறை



ஆதரைட்டிஸ் எனப்படும் நோயைக் குணப்படுத்துவதற்கும், பல ஆங்கில மருத்துவ வசதிகள் வந்திருக்கின்றன. ஆனால் அவை பலதரப்பட்ட பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தற்போது அக்குப்பஞ்சர் முறைமூலம் இந்த ஆதரைட்டிஸ் நோய்க்குச் சிகிச்சையளிக்கின்ற பொழுது, ஏறக்குறைய 40 வீதமான நோயாளிகள் குணமடைந்து இருக்கிறார்கள் அல்லது குணமடைவதற்கான வாய்ப்புக்கள் தெரிவதாகக் கூறப்படுகிறது. 570 நோயாளிகள் இதற்கான ஆராய்ச்சிகளுக்காக எடுக்கப்பட்டு, அவர்களில் ஒரு சாராருக்கு அக்குப்பஞ்சர் சிகிச்சையும், மற்றொரு சாராருக்கு ஆங்கில மருத்துவ மற்றும் சுதேசிய மருத்துவ சிகிச்சையும் கொடுக்கப்பட்டபொழுது, அவர்களில் பெரும்பாலானவர்கள் அக்குப் பஞ்சர் சிகிச்சைக்கு நல்ல முன்னேற்றமான விளைவுகளைக் காட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த அக்குப் பஞ்சர் சிகிச்சை முறை 2.000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பே சீன நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் இந்தச் சிகிச்சை முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதில் மிக முக்கியமானது கழுத்தில் ஏற்படும் நோ. இது கூடுதலாக அக்குப் பஞ்சர் சிகிச்சையின்போது ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

# புதிய இதய அமுக்க மருந்து

இதய அமுக்க நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து தற்போது கண்டு பிடிக்கப்படுகிறது. இது ஊசிமூலம் ஏற்றப்பட்டு, இதயத் தாக்கத்தால் இறப்பவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



இதய அமுக்க நோய்க்கு மிக முக்கிய காரணியாக அமைவது – கொழுப்புச்சத்தின் தாக்கமாகிய கொலஸ்ரோல். ஆனால் மேல்நாடுகளைப் பொறுத்தவரையில் கொழுப்புணவுகளில் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாது மக்கள் தவிர்க்கிறார்கள். இதயத் தாக்கம் ஐரோப்பாவில் மட்டும் 270,000 மக்களைக் கொல்கிறது. தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வக்சின்மூலம் 2010 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 40 வீதத்துக்கு மேல் இதய நோயால் இறக்கும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்கமுடியும் எனக்கூறப்படுகிறது.

தற்போது கொடுக்கப்படுகின்ற வக்சின் குருதிக்குழாய்களை விரிவடையச் செய்து, முதலில் இரத்தச் சுற்றோட்டத்தைச் சீராக்கக் கூடியது. அதன்பிறகு அதே வக்சின் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தக் கூடியதாகக் காணப்படுகிறது. இந்த மருந்தும் வழமைபோல எலிகளிலேயே சோதித்துப்பார்க்கப்பட்டது. ஆனால் எலிகளால் ஏற்படும் பிளேக்நோயையும் இது கட்டுப்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

# ஆபாசத்தில் இருக்கும் கையடக்கத் தொலைபேசிகள்



இந்தியாவில் மொபைல் கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரித்து காணப்படுகின்ற இந்தவேளையில், பாவனையாளர்களுக்கு இடியாக வரும் ஓர் செய்தியும் உள்ளது. ஏறக்குறைய 75 வீதமான பல்கலைக்கழக மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியுடன் பல்கலைக் கழகத்துக்கு வருகிறார்கள். அவர்கள் ஜீ.பீ.ஆர்.எஸ்.மூலம் ஆபாசமான படங்களைக் கண்டுகளிப்பதாக டெல்கி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இப்படியான ஜீ.பீ.ஆர்.எஸ். தொடர்புகளை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திக்கொடுத்த ஒருவர் – பொலிஸாரால் பிடிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொண்டு, 200 ஆயிரம் ரூபா பிணையில் வெளிவர அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை ஆபாச சிடிக்கள் தற்பொழுது கையடக்கத் தொலைபேசிகளிலும் பதியக்கூடிய வசதியிருப்பதால், இந்தியாவில் திடீர் கையடக்கத்தொலைபேசிப் பரிசோதனையை பொலிஸார் மேற்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# தொலைக்காட்டிகளின் வரலாறு



தொலைகாட்டிகளுக்கெல்லாம் தந்தையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற பழைய தொலைகாட்டி – தன்னுடைய 100 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடியிருக்கிறது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த தொலைகாட்டி, இப்போதும் அதே தரத்துடன் ஆய்வுகூடத்தில் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். 1904 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட இந்த உபகரணம் ஹேல் என்பவரின் சொந்தப் பணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதைய செலவுப்படி 27 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக இது காணப்பட்டது. ஹேல் என்பவருடன் ஜோர்ஜ் எலரி என்பவரும் சேர்ந்து இதனைக் கண்டுபிடித்ததாகவும், தொழில்நுட்ப ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. உண்மையில் இதனுடைய முற்றுமுழுதான வெற்றோட்டம் 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதிதான் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இந்தத் தொலைகாட்டியின் மாதிரியை வைத்துக் கொண்டுதான் எட்வின் கபிற் என்பவர் இராட்சத தொலைகாட்டியை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார். 1929 ஆம் அண்டு அவர் கபின் தொலைக்காட்டியைக் கண்டுபிடித்தார்.

# மீன் பிடிக்கும் ஒப்பந்தம்

ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகள் மீன்பிடித் தொழிலுக்கு ஒரு வகையான கட்டுப்பாட்டையும், அத்துடன் சில ஒப்பந்தங்களையும் மேற்கொள்வதற்காக அண்மையில் கூடி ஆராய்ந்திருக்கின்றன. அந்தந்த நாடுகளின் மீன்பிடித்துறை அமைச்சர்கள் சேர்ந்து, ஆராய்ந்து 2005 ஆம் ஆண்டில் எந்தக் கடற்பரப்பில் எந்த நாடுகளுக்கு மிகவும் முக்கிய மீன்பிடிப் பிரதேசங்களை ஒதுக்குவது என்பதில் மிகவும் தெளிவாகவும், முடிவாகவும் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.



கடந்த சில வருடங்களாக பலதரப்பட்ட நாடுகளின் மீனவர்களிடையே ஏற்பட்ட போருக்கான ஒரு முடிவாக இது இருக்குமென ஐரோப்பிய நாடுகளின் மீனவர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டிருக்கிறார்கள். தற்போது நவீன முறையில் மீன் பிடிப்பதன் காரணமாக மீன்பிடித் தொழிலின் பாரம்பரிய முறைகள் எல்லாம் செயலிழந்துவிட்டன. அதுடன், மீன்பிடித் தொழிலில் ஏற்பட்ட போட்டி, சந்தையில் இதனால் கிடைக்கின்ற வருமானம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, ஒரு குறித்த நாடு எல்லா மீன் வளங்களையும் அனுபவிப்பது என்பது ஏற்கமுடியாத ஒன்று எனக் கருதப்படுகிறது. இந்த நடைமுறை 2005 இல் வெற்றியளிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# மூளை வளர்ச்சிக்கான காரணிகள்



தற்போது பிள்ளைகள் படித்தால் மட்டுமே மூளை வளர்ச்சியடையும் என்ற மூட நம்பிக்கைகளில் திளைத்துப்போய் இருக் கிறார்கள். ஆனால் லண்டன் பல் கலைக்கழகத்தின் கருத்துப்படி, மூளையின் செயற்பாடு பலதரப்பட்ட வேலைப்பாடுகள் அதாவது – பிள்ளைகள் தொடர்ச்சியான முயற்சிகளில் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக – ஒரேமாதிரியாக கூட்டம் கூட்டமாக நடனமாடும் பொழுது, அங்கே மூளையினுடைய செயற்பாட்டுத்திறன்களை மையமாக வைத்து நடைபெறுவதாக மருத்துவ மற்றும் உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். பாலட் எனப்படும் ராயல் நடனமாடுபவர்களைப் பற்றி எடுக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவர்களுடைய மூளைச் செயற்பாடு– ஓரளவுக்கு ஒத்ததாகவும், எந்தவிதமான தொடர்புகளும் அற்ற அதாவது வாயசைப்புக்களும் அற்ற ஒருவகையான மூளை செயற்பாடாகவும் இருக்கிறது. விஞ்ஞானிகளின் கருத்துப்படி உடலின் பௌதீகச் செயற்பாடுகள் மூளையினுடைய இயக்கத்துக்கு ஏதோ ஒருவகையில் உறுதுணையாகவும், அத்துடன் உள்ளுணர்வு எனப்படும் ஒருவகையான தாக்கத்திறனும் மூளையின் செயற்பாட்டுக்குரிய காரணங்கள் எனக் கூறப்படுகிறது. உண்மையில் படிப்புடன் மட்டும் நின்றுவிடாது, மாணவர்கள் புறச்செயற்பாடுகளிலும் ஈடுபடும்போது மூளை வளரும் என்பது உண்மைதான்.

# கணினி கல்விச் சிறப்பிதழ்

'வானத்தில் ஏறி சந்திரமண்டல வாசலைத் தொடலாமா' என்று ஒரு காலத்தில் எழுந்த கேள்விக்கு நல்லதொரு பதில் கிடைக்கும் வரை அது வெறும் கனவான விடயமாகவே பலராலும் கருதப்பட்டது. இன்று எல்லோராலும் பேசப்படுகின்ற இணையப் பயன்பாடுகளை ஈவாகத் தந்தது தகவல் தொழில் நுட்பம் (Information Technology). அதனது நாளைய பரிணாமம் 'தகவல் பெருவழி' (Information Superhighway). அது தரப்போகின்ற

# தகவல் பெருவழி

பயன்பாடுகள் இன்றைய கனவாகத் தோன்றினாலும், அதற்கான ஆரம்பநிலைகள் இன்றைய இணையப் பயன்பாட்டிலேயே தொடங்கி அவை நனவாகும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் கோடிகாட்டி நிற்கின்றன.

இச்சிறு குறிப்புரையில், தகவல் தொழில் நுட்பம் என்றால் என்ன? 'தகவல் பெருவழி' என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் எவை? அவற்றால் ஏற்படும் தீமைகள் அல்லது பயங்கள் எவை என்பதையும் இதன் அடிப்படையாக விளங்கும் இணையம் பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டியவை என்ன என்பது பற்றியும் மிகச்சுருக்கமாகப் பார்ப்போம்.

**தகவல் தொழில்நுட்பம் - தகவல் பெருவழி என்றால் என்ன?**

தகவலை எமக்குத் தேவையான வடிவத்தில் மாற்ற, சேமிக்க பரிமாறுவதற்கு அல்லது பரப்புவதற்கு கணனியுடன் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் நுட்பம் தகவல் தொழில்நுட்பம் எனப்படுகிறது. இது புறாவிடு தூதில் ஆரம்பித்து கம்பியில் லாத் தந்தி, தொலைபேசி, தொலைநகல்இ தொலைக் காட்சி, வீடியோ தொலைபேசி, என வளர்ச்சியடைந்த தொடர்பாடல் தொழில்நுட்பத்தினதும் அபக்கஸ் எண்சட்டத்தில் ஆரம்பித்து கூட்டல் இயந்திரம், இலத்திரனியல் கணனி, கணனி வலையமைவு என வளர்ச்சிய டைந்த கணனித் தொழில்நுட்பத்தினதும் இணைப்பினால் எமக்குக் கிடைத்துள்ளது. இங்கு கணனிகள் தொலைத் தொடர்பு சாதனம் மூலம் வலையமை வில் இணைக் கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.

இத் தகவல் தொழில்நுட்பமானது "தகவல் பெருவழி" (Informa tion Superhighway) என்கின்றஎதிர் பார்ப்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இது வலையமைவிலுள்ள கணனிகளையும் தொலை பேசிகளையும் கம்பிமூலமாகவோ கம்பியில்லாமலோ (Wired/wireless) கேபிள் தொலைக் காட்சியில் உள் ளது போனற வசதிகளுடன் இருவழித் தொடர்பாடலுக்கு இணைப்பதாகும். இதன விளைவாக அசையும் படங்கள், தொலைக்காட்சி, தொலைபேசி அழைப்புக்கள், இணையத்தளங்கள் மற்றும் நேரடி உடன் சேவைகள் (on-line services) கிடைக்கும்.

தகவல் தொழில்நுட்பமானது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தற்போது நுழைந்து கொண்டிருக்கின்றது. நாமும் இதற்குத் தயாராக வேண்டும். எமது பகுதியில் இது பிந்திவிட்டது என்றாலும் சமாதானம் ஏற் பட்ட இக் குறுகிய காலகட்டத்தில் இதன் வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது என்பது உத்வேகம் தரும்.

**"தகவல் பெருவழி" மூலம் எமக்குள்ள பயன்கள்**

வேலையுலகத்திலோ அல்லது பொழுது போக்குலகத்திலோ அல்லது கல்வியுலகத்திலோ எமது வாழ்க்கைமுறையை முற்றாக மாற்றிய மைக்கக் கூடிய தன்மை தகவல் பெருவழிக்குண்டு. இதன் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகள் பல.

1. தொலைப்பணி (teleworking) அலுவலர்கள் அடையும் பலனாகும். இது அலுவலகத்திற்கு சென்று வரவேட்டிவ் கையொப்பம் இட்டு வேலை தொடங்குவது போன்று, கணனி மூலம் மாய அலுவலகத்திற்குச் சென்று ஆனால் நிஜமாகவே பணிகளை நிறைவேற்ற உதவும் வசதியாகும். இதனால் ஏற்படும் பயன்களுள் இவையும் அடங்கும்:
   - ❖ வேலைக்கென்று பிரயாணம் செய்யத் தேவையில்லை.
   - ❖ வேலை தொடர்பான பழுக்கள் குறையும்.
   - ❖ வலது குறைந்தோர்களும் குழந்தைகளைக் கவனிக்க வேண்டிய தாய்மார்களும் வீட்டிலிருந்தவாறே வேலை செய்யலாம் (அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த கணனியில் பணியாற்றும் ஒரு பெண்மணி கூறிய நடைமுறை உண்மை இது!)
2. தொழில் நிறுவனங்கள் அடையும் பலன்களாவன:
   - ❖ உற்பத்தித்திறன் அதிகரிக்கும்
   - ❖ கட்டிடங்களுக்கான செலவு குறையும்
3. கல்வியில் குறிப்பிடத்தக்க பல பலன்களைக் காணலாம்:
   - ❖ பகிரப்படும் கற்கைப் பரப்பு
   - ❖ மேம்பாடடையும் கூட்டுக்கல்வி
   - ❖ இலக்கரீதி (கணனிவழி) நூல்கள்
   - ❖ மாய நூலகம்
   - ❖ மாய அரும்பொருட்காட்சியகம்
   - ❖ இலத்திரனியல்மய வகுப்பு
   - ❖ தொலைதூரக்கல்வி
4. பல்கோண சமுதாயத மேம்பாடுகள்:
   - ❖ மேம்பாடான இலகுவில் விரைவாகக் கிடைக்க கூடிய வைத்திய நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் சுகாதார சேவைகள்
   - ❖ கணனிமயமாக்கப்பட்ட அரசாங்க / தனியார் நிறுவனங்கள்
   - ❖ வீட்டிலிருந்தவாறே வேலை செய்யும் வசதிகள்
   - ❖ வீட்டிலிருந்தவாறே சேவைகளைப் பெறக்கூடிய வசதிகள்




**திருமதி. இராஜசிவசக்தி மகேசன்**
**கணினி முறைமைப் பகுப்பாளர்**
**கணனிப்பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்.**

- ❖ இலத்திரனியல் வணிக நடவடிக்கைகள்
- ❖ இலத்திரனியல் வங்கிச் சேவைகள்
- ❖ வீட்டிலிருந்தவாறே பொருட்களை கொள்வனவு செய்யும் வசதிகள்
- ❖ குறைகின்ற போக்குவரத்து நெரிசல்கள்
- ❖ குறைகின்ற எரிபொருள் பயன்பாடு
- ❖ குறைகின்ற சூழல் மாசு
- ❖ குறைகின்ற பராமரிப்பு செலவினங் கள்

இத் தகவல் காலகட்டத்தில், தொலைத் தொடர்பில் முதலீடு செய்யும் நாடுகள் கல்வியறிவூட்டுவதிலும், உறபத்திகளை அபிவிருத்தி செய்வதிலும் தங்கள் சேவைகளை மற் றவர்களுக்கு அளிப்பதிலும் அடையும் முன் னேற்றம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். முதலீடு செய்யாத நாடுகள் அபிவிருத்தியில் பின்தங்கியும் இதே சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக பணம் செலவளிக்க வேண்டியும் ஏற்படும்.

இவ்வாறு பலபயன்கள் இந்தப் பெருவழியால் கிடைக்கின்ற போதும் இத னால் தீமைகள் ஏற்படும் என்கின்ற அர்த்தமுள்ள மற்றும் அர்த்தமற்ற பயங்களும் மக்களிடத்தில் உள்ளன. இவை யாவை என அடுத்துப் பார்ப்போம்.

**தகவல் பெருவழி தரும் பயங்கள்:**

யாரும் எங்கிருந்தும் தொடர்பு கொள்ளலாம் என்று இருக்கும போது இதிலுள்ள தனிப்பட்ட தகவல்கள், மருத்துவக் குறிப்புக்கள், சிகிச்சை பெறுபவரின் நோய் வரலாறு, வங்கிக்கணக்குகள் போன் றவை இரகசியமாக இருக்குமா? எமது வங்கி அட்டையின் இலக்கம் வேறு யாரலும் பயன்படுத்தப்பட்டு பணமோடி செய்யப் படுமா? பிரத்தியேகம் பேணப் படுமா? என்கின்ற கேள்வி எழுகின் றன. வங் கிக் கணக்கிலிருந்து பண மாற்றம் செய்யும் போது அது சரியாக நடக்கின்றதா? எமது கணக்கை இன்னொருவர் கையாள முடியுமா? என்கின்ற சந்தேகம் எழுகின்றது. பிரத்தியேகத்தன்மையையும் தரவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது அந்தந்த நிறுவனங்களின கடமையாகவுள்ளது. அதற்குகந்த நுட்புகளடங்கிய கணிமங்க ளைப் பயன்படுத்து வதன் மூலம் இதனை உறுதி செய்யலாம்.

**இளையசமுதாயத்தினருக்கு அறிமுகம்:**

நாளைவரப்போகின்ற தகவல் பெருவழி உலகத்திற்காக எம்மை நாம் தயார்படுத்திக்

(2ஆம்பக்கம் பார்க்க)


City & Guilds பாடநெறி மூலம் மிக இளம் வயதினிலேயே ஒருகணனிப்பட்டத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

City & Guilds

**O/L முடித்தவுடனேயே உங்கள் பட்டப்படிப்பையும் தொடங்கிவிடுங்கள்**



ஏன் City & Guilds ஐ நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்

1. இலண்டன் பல்கலைக்கழக சான்றிதழ்
2. இலங்கை உட்பட 102 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் தொழினுட்பக் கல்லூரியினூடு நடாத்தப்படும் பாடநெறி
3. இளம் வயதிலேயே பட்டம் பெறும் வாய்ப்பு
4. மிகக்குறைந்த தகுதியாக O/L அங்கீகரிக்கப்படுகின்றது
5. விரும்பிய நாட்டில் visa பெற்று மேற்படிப்பை மேற்கொள்ளும் வசதி

அனுமதிகள்
January 5 முதல்

மேலும்
**ஆரம்பமாகும் பாடநெறிகள்**

**Dip. in Computer Studies** (3 Months)
**Dip. in Hardware Technology** (3 Months)
**Dip. in Desktop Publishing** (2 Months)
**Certificate Course Accounting** (2 Months)

மேலதிக விபரங்களிற்கு
STP Yuor Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam.
Branch: Sankaththanai, Chavakachcheri

(C/3530)

கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. முக்கியமாக இளைய சமுதாயத்தினருக்கு அறிமுகப் படுத்தி சரியான முறையில் பயன்பாடுகளைப் பெற்றுக்கொள்ள வழி காட்ட வேண்டிய கடமை பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் உண்டு. இன்று நாம் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்ற இணைய சேவைகளை அடிப்படையாகக் கொண்டே இதனை நாம் நோக்குவோம்.

**பெற்றோரின் பங்கு:**

பிள்ளைகளுக்கு அவர்கள் கல்வி சம்பந்தமான தேவைகட் கும் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும் இணைய வசதி களைப் பயன்படுத்தப் போதிக்க வேண்டும். அதில் கிடைக்கக் கூடிய வேறு பயன்தரு வசதிகளையும் அறிமுகப் படுத்த வேண்டும்.

இணையமூலம் வரக்கூடிய பிரச்சினை களிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

சில தகவல்கள் அவர்களின் வயதிற்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். அதே நேரம் பாவித்துக் கொண்டிருக்கின்ற சிலருடைய தொடர்பும் பிள்ளைகளுக்கு தீங்காக முடியலாம்.

பெற்றோர் தங்களின் பிள்ளைகளுக்கு எத்தகவல்கள் கிடைக்க வேண்டும், எவை கிடைக்கக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கவேண்டும். பாலியல் ரீதியான இவன் முறையான, இன பாகுபாட்டைத் தூண்டும் விடயங்கள் மற்றும் மனதைக் கவருகின்ற ஆனால் நேர்மையற்ற வணிக விளம்பரங்கள் போன்றவை கவலைக்குரியவை.

- ❖ ஆனால் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல வழிகள் உள்ளன.
- ❖ முதலில் இணையம் பற்றி அறிந்து கொள்ளவேண்டும்
- ❖ பிள்ளைகள் பயன்படுத்தும் போது அவர்களுடன் இணைந்து செய்ய வேண்டும்.
- ❖ தேவையற்ற தகவல்களை வராமற் தடை செய்யத் தக்க வகையில் செயற்படும் வடிகட்டும் கட்டுப் பாட்டுக் கணிமங்களைப் பயன்படுத்த பெற்றோர் அறிந்திருக்க வேண்டும்.

இதற்கு இணையச் சேவையை வழங்குநர்களுடன் (ISP) தொடர்பு கொள்ளலாம். நீங்கள் **Cyber Patrol, CYBERsitter** போன்ற தடைசெய்யக்கூடிய கணிமங்களை வாங்கிப் பயன்படுத்தலாம். கணனியில் உள்ள (**Internet explorer** போன்ற) இணைய உசாவிகளயலும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

இணையத்தினால் கிடைக்கின்ற பிரபல்யமான நன்மைகளிலொன்று **electronic-mail** அல்லது **e-mail** எனப்படுகின்ற ,- அஞ்சல் ஆகும். ஆசிரியர், குடும்பத்தினர், நண்பர்களுடன் தொடர்பு கொள்ளல், வீட்டு வேலைகளை செய்வதற்கு உதவி பெறல், செய்தி இதழ்களைப் பெறல், எழுத்துப் பயிற்சி போன்ற பல நன்மைகள் இதனால் உண்டு.

அதே நேரம் தெரிந்தவர்கள் போன்று அந்நியர்கள் சிறு பிள்ளைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி எமது பண்பாட்டுக்கு ஒவ்வாத செயற்பாடுகளுக்கு தூண்டலாம். சில நாடுகளில் தமது வருவாய்காக இவ்வாறு செய்கின்றார்கள். சில வணிக நிறுவனங்கள் தமது பொருட்களை விளம்பரப்படுத்தும் நோக்குடன் எமது முகவரிகளை எப்படியோ பெற்று, எமக்கு அஞ்சல்கள் அனுப்பிய வண்ணமே இருப்பார்கள். இவ்வாறான அஞ்சல்களை **spam** என அழைப்போம். இதுவும் மிகவும் விரும்பத்தகாத தொந்தரவான விடயமே. இவ்வாறான அஞ்சல்களைத் தடுப்பதற்கு அஞ்சல் முகவரிகளை பிறருக்குக் கொடுக்கின்ற போது கவனம் செலுத்த வேண்டும். எமது அனுமதியின்றி வேறு யாருக்கும் முகவரிகளைக் கொடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

மேலும் பெற்றார் பிள்ளையின் இலத்திரனியல் அஞ்சல் முகவரியையும், கடவைச் சொல்லையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும் அல்லது அஞ்சலிற்கு உங்கள் முகவரியைப் பயன்படுத்த அறிவுறுத்தல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட முகவரியிலிருந்து வரும் அஞ்சலினை, தகாத விடயங்களுள்ள அஞ்சலினை ஏற்காது விடல், தனிப்பட்டதகவல்களை அனுப்புவதைஃ பெறுவதை கட்டுப்படுத்தல் போன்ற முறைகளைக் கையாளலாம்.

முக்கியமாக பிள்ளைகள் ஒருபோதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை பெற்றோரின் அநுமதியின்றி எவருக்கும் கொடுக்கக் கூடாது என்பதையும், அறிமுகமற்றவர்களுடன் தொடர்பு வைக்கக் கூடாது என்பதனையும் நன்றாக அறிவுறித்த வேண்டும்.

**ஆசிரியரின் பங்கு:**

மாணவர்களின் சிறந்த தரமான கற்றலுக்கு ஆசிரியரின் பங்கு முக்கியமானதென்று நன்கறிவோம். எனவே ஆசிரியர்களுக்கு இப்புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவைவூட்ட வேண்டும். இத் தொழில்நுட்பத்தைக் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களுக்கு அது பற்றிய அறிவையும், இத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வகுப்பறையில் தமது கற்பிக்கும் ஆற்றலை வளர்க்கவும், கற்பிக்கும் முறையை மாற்றியமைக்கவும் பயிற்ச்சியளிக்க வேண்டும். இதற்காக மனித மூலவள நிலையம், உலக வங்கி போன்ற பல நிறுவனங்கள் குறுகியகால, சான்றிதழ் பயிற்சிகள் பல ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆசிரியரின் பங்கு போதனாசிரியர் நிலையிலிருந்து கற்கும் சூழலை உருவாக்கி அளிப்பவர் என்ற நிலைக்கும், படிக்கும் சூழலுக்கு பயிற்றுவிப்பவர் என்ற நிலைக்கும் மாற வேண்டும். யாழ்மாவட்டத்தில் கிட்டத்தட்ட 25% மேற்பட்ட ஆசிரியர்கள் இப் பயிற்சியினைப் பெற்றிருக்கின்றனர். மற்றைய ஆசிரியர்களுக்கும் இத்தகைய பயிற்சிகளை அளிப்பது அவசியமாகும்.

கணனி வசதியுள்ள பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர்கள் குறிப்பாக தகவல் தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆசியர்கள் தொழில்நுட்பத்தை தங்கள் கற்பித்தலுக்கு பயன்படுத்த வேண்டும்.

இன்னும் சில ஆசிரியர்களுக்கு கணனியை தாம் பயன்படுத்தும் போது பழுதடையச்செய்து விடுவோமோ அல்லது தாம் பயன்படுத்தும்போது பழுதடைந்தால் தம்மீது பழி வந்துவிடுமோ என்ற பயம் உண்டு. சிலருக்கு கணனியை பாவிப்பதற்கு அனுமதி கிடைக்காமலும் இருக்கிறது. கணனியைப் பயன்படுத்தும்போது யாரும் பழுதாக்க முடியாது. பழுதடைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அநேக பழுதுகள்/பிழைகள் திருத்தக் கூடியவை. பாடசாலை நிர்வாகத்தினர் இதற்குப் பொறுப்பேற்று ஆசிரியர்களையும் மாணவர்களையும் கணனிகளைப் பயமின்றிப் பயன்படுத்த ஊக்கமளிக்க வேண்டும்.

மேலும் நாம் கணனியை வாங்கும்போது புதிய நுட்பத்துடனான நவீன கணனிகளை வாங்கி உடனடியாகவே பயன்படுத்தத் தொடங்க வேண்டும். நீண்ட நாட்கள் பயன்படுத்தாது வைக்கப் படுமாயின் அதன் பயன்பாட்டுக் காலம் குறுகிவிடும். மேலும் உத்தரவாத காலம் வீணாகிப்போகும்.

அரசியல், சமுதாய, கல்வி, பொருளாதார மேம்பாடுகள் போன்ற பல நன்மைகளைத் தரப் போகின்ற தகவல் பெரு வழிக்கு எம்மை நாமே தயார் செய்வோம். அது தரப்போகும் தீமைகளை எண்ணிப் பயங்கொள்ளாது அவற்றை நீக்கும் வழி வகைகளைக் கையாண்டு அல்லதை நீக்கி நல்லதை ஏற்க எம்மை நாம் தயார் செய்து நாளைய உலகுக்கு ஏற்ற பண்புமிக்க அறிவுடைய இளைய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோம்.

❇


## விசேட கணனி கற்கைநெறிக்கான புலமைப் பரிசில்

## 2005

உலக நாடுகளில் பிரபல்யம் பெற்று முன்னணியில் இருக்கும் Microsoft நிறுவனத்தின் ஆதரவைப் பெற்றதும், அமலமரித் தியாகிகள், அருட்தந்தையர்களின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்டத்தில் கணனிப் பயற்சிகளைப் பிரபல்யமாக நடத்தி வருகின்ற CATWAS.COM நிறுவனம் 2005ம் ஆண்டுக்கான விஷேட புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பிக்கிறது.

1.Diploma in Microsoft Office
4.Diploma in Video Mixing
2.Diploma in Desktop Publishing
5. Diploma in Web page Designing
3.Diploma in Hard Ware
4.Diploma in Visual Basic

**பரீட்சைகள்**

பொது அறிவு, பொது உளச்சார்பு சார்ந்தவையாக அமையும்.

**பரீட்சைக்குத் தோற்றக் கூடியவர்கள்**

O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும், ஆண்டு 11 இல் கல்வி பயில்பவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும், வேலை வாய்ப்பை எதிர்பார்த்திருப்பவர்களும், பட்டதாரிகளும், கணனித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் வயது வேறுபாடு இன்றி இங்கு காணப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 05.01.2005க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மேலதிக விபரங்கள்**

பரீட்சைக்கான அனுமதிகள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற,
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna என்னும் முகவரியில் அமைந்துள்ள CATWAS.COM Computer Acadamy ல் தொடர்பு கொள்ளவும்.

**இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவும்**

### Application Form

Full Name :..............................
Address :..............................
Date of Birth :..............................
Sex :..............................
Courses :..............................

............. Date ............. Signature

**CATWAS.COM**
**Computer Academy** (C/3508)

**இயக்குனர்**
No: 26, Somasundram Avenue,
Chundukuli,Jaffna.
Tel:021-2223805 (C/3508)



# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**ஆரம்பம்: 03.01.2005**

| | | |
|---|---|---|
| I. | A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| | B. DILPOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| | C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| | D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| | E. DIPOLOMA IN DESK TOPO PUBLISHING | DURATION 6 MONTHS |
| | F. DIPLOMA IN ACCESS INCLUDING S. Q. L | DURATION 3 MONTHS |
| | G. INTERNET & E - MAIL | DURATION 1 MONTH |
| | H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |

II. CERTIFICATE COURSES:

| | | | |
|---|---|---|---|
| 1. M.S. WORD - 2000 | 5. VISUL BASIC VER 6.5 | 9. WINDOWS-95 | 13. ADOBE PHOTO SHOP |
| 2. M.S. EXCEL - 2000 | 6. PASCAL | 10. COREL DRAW | 14. QUICK BOOK |
| 3. M.S ACCESS - 2000 | 7. d BASE 111+ | 11. d BASE FOR WINDOWS | |
| 4. M.S. POWERPOINT | 8. PAGE MAKER | 12. PRINT SHOP DELUXE | |

| | | |
|---|---|---|
| III. | சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| | (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| IV. | சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. | மோட்டார் வாகனம் திருத்துதல் (petrol & Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. | ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங) | காலம் 6 மாதங்கள் |
| VII. | வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII. | கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. | மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| X. | மரவேலை (with Use of Machinery) | காலம் 6 மாதங்கள் |
| XI. | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2005**

2005ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தில் வழங்கப் பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதைச் சகல வாகன உரிமையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

**NOTE**

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங்காட்டி, பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது நிறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன் சகலவிதமான இரும்பு சார் உற்பத்திப்பொருட்களும், ஒட்டு வேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.**

**சனி, ஞாயிறு வகுப்புகளும் இடம்பெறும்**

மேலதிக விபரங்களுக்கு:

REGISTRAR,
PATRICIAN INSTITUTES
59,St.Patrick's Road,
Jaffna. (C/3531)

# சிறந்த இணையப்பக்கங்களை இன்றே இனங்காண்போம்

இந்தப் பகுதியில் சிறந்த சில இணைப் பக்கங்களை சிறு சிறு குறிப்புக்களுடன் இனங்காண இருக்கின்றேன். இதை நீங்களும் நுகர்ந்து யான் பெற்ற இன்பம் பெறுக!

**பெற்றோர்களுக்கு மகச் சிறந்த இணையப் பக்கங்கள**

இந்தப் பக்கங்கள் ஏராள மான நல்ல தகவல்களைப் பெற்றோர்களும், இளம் தாய் மார்களுக்கும் வழங்குகின் றன. குழந்தை வளப்பிற்கான ஆலோசனைகள், மருத்துவ ஆலோசனைகள், கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆலோச னைகள் என பல தரப்பட்ட தகவல்கள் இவற்றில் உள் ளன.

i. http://www.parentsoup.com
ii. http://www.parentsplace.com
iii. http://www.parenttime.com
iv. http://www.family.com
v. http://www.babycenter.com
vi. http://www.familyeducation.com

**குழந்தகளுக்கான சிறந்த தேடற்பொறி**
**(web search Engines)**

1) **Yahooligans**
**http://www.yahooligans.com**

இது "ஜாகூ" (yahoo) வினுடைய குழந்தைகளுக் கான சிறந்த தேடற் (search engine) பொறி ஆகும்.

11) **Safety Net**
**http://Personal.lycos.com/saftynet**

இது "லீகோஸ்" (Lycos) இனுடைய குழந்தைகளுக் கான தேடற்பொறியாகும். லீகோஸினுடைய "சேர்வேர்" (Sever) இலுள்ள ஒப்சன் (option) ஒன்றை தெரிவு செய்வதன் மூலம் சேர்வேரி லுள்ள வடிகட்டல் செய் நிரலை (Filter Programme) பாதுகாப்பான இணையப் பக்கங்களைத் தேடித்தரு கின்றது.

இதைப் பயன்படுத்துவ தற்கு பெற்றோர்கள் LYCOS SERVER இல் தங்களைப் பதிவு செய்து கடவுச் சொல்லை (Password) பெறு தல் வேண்டும். இந்தப் pass word ஐப் பயன்படுத்தி Filter ஐப் on/off செய்து கொள்ளலாம்.

iii) **ASK JEEVES**
**http://www.ajkids.com**

இதுவும் குழந்தைகளுக் கான வடிகட்டப்பட்ட ஒரு Search Engine ஆகும். இதில் ஒரு கேள்வியைக் கேட்பதன் மூலம் அக்கேள் விக்கான விடை அடங்கிய இணையப் பக்கங்களைப் பெறலாம்.

**Net Nanny** என்பது விலைக்குக் கிடைக்கின்ற ஒரு வடிகட்டல் செய்திரலா கும். (Filter Programme) இது பற்றி மேலதிக விபரங் களைப் பெற்றுக்கொள்ள பின்வரும் இணைய முகவரி யினைப் பயன்படுத்தலாம்.

iv) **NetNanny**
**http://www.netnanny.com**

**கல்வி சார்ந்த இணையப் பக்கங்கள் சிலவற் றினை இங்கே பார்ப் போம்.**

i) **The Electronic Tamil Library**
**http://www.geocities.com/Athens/5180/indexhtml**

இது தமிழ் மின் நூலகமாகும். இணையத்திலுள்ள சிறந்த தமிழ் நூலகங்களில் ஒன்று. இந்த மின் நூலகத்தின் மூலம் தமிழ் பற்றிய பல தகவல்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

ii) **National children's reading Foundation**
**http://www.nationalreading.com**

இது குழந்தைகளின் வாசிப்புத் திறனை உயர்த்து வதற்கான இணையப்பக்கமா கும்.

iii) **TIME FOR KIDS**
**http://www.pathfinder.com/TFK**

இது "ரைம்" (time) சஞ்சி கையின் சிறுவர்களுக்கான பிரதியாகும். இதனூடாக சிறுவர்கள் தமது திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

iv) **Virtual Research of sheriden College,Canda.**
**http://www.Sheridanc.on.ca/lit/Canlib**

இது ஒரு இணைய ஆய் வுக்கு உதவும் இணையப் பக்கமாகும். இது கனடாவில் இருக்கும் அநேக நூல் நிலையங்களின் முகவரி களைக் கொண்டுள்ளது.

**இணையம் தொடர் பான செய்திப் பக்கங் கள் சிலவற்றினைப் பார்ப்போம்.**

i) ABC NEWS - http://abcnews.go.com
ii) CNN NEWS - http:// wwwcnn.com
iii) BBC NEWS - http:// news.bbc.co.uk
iv) AFP NEWS - http://www.afp.com
v) TAMIL NET - http://www.tamilnet.com

**கிரிக்கெற் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கான இணையப்பக்கம்.**

i)Cricket News
http://www.cricket.org

**தமிழ் வானொலி பற்றிய பக்கங்கள் நிறையவே இருக்கின்றன.**

i) CTBC Radio
http://www.ctbc.com
ii) TRT Radio (24Hrs)
http://www.trt.net

**இணையத்தில் சினிமா தொடர்பான பக்கங் களும் நிறையவே உள் ளன இவற்றில் சில,**

i)Tamil Cinema online
http://tamilcinema.8m.com
ii)Candian movie Guide
www.tamilmovies.com
iii) tamilcinema.com

**இணையத்தில் வங்கி யும் பணமும் காணப் படுகின்றன. இவை இணைய வங்கி (Inter net Banking) என்றும் இணையப் பணம் (e-cash) என்றும் அழைக் கப்படுகின்றன.**

i) e-cach web site
http://www.digicash.com
ii)online Book Depot.
http://www.amazon.com
iii) National Virtual Bank
http://www.citizens bank. ca

இணையம் கண்ட இன் றைய மனிதன் இன்னும் எத்தனை, எத்தனை இணை யத்தினூடான பிணையத் தினை நாளை காணப போகின்றானோ!


## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா !

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visa க்களைப்பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் BSc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப்பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.



**தே. வாகீசன்**
**கோண்டாவில்**

2002ம் ஆண்டு உயர்தர பரீட்சை எடுத்த நான் 2004ம் ஆண்டுக்குரிய யாழ் பல்கலைக் கழக விவசாய பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். கணனித்துறையில் இருந்த எனது ஆர்வம் காரணமாக அத்துறையிலேயே எனது பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பினேன். இதற்காக IIS நிறுவனத்தினால் நடத்தப்படும் Edexcel இன் BTEC HND கற்கை நெறியினை தெரிவு செய்து கற்று வருகிறேன். எனது இறுதியாண்டு பட்டக் கல்வியினை மேற்கொள்ள இங்கிலாந்து பல்கலைக் கழகமொன்றிற்கு செல்ல இருக்கும் இச் சந்தர்ப்பத்தையிட்டுமகிழ்ச்சியடைகின்றேன். HND கற்கைநெறியானது குறுகிய காலத்தில் ஒரு சர்வதேச பட்டக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு சிறந்த தெரிவு என்பது எனது கருத்தாகும்.



**இ. திருமுருகன்**
**கோப்பாய்**

நான் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பிரிவைச் சேர்ந்த மாணவனாக இருந்தும் எனது எதிர்காலத்தின் தேவையை உணர்ந்து (வேலை வாய்ப்புக்கள்) கணனித்துறையினைத் தெரிவு செய்தேன். அதற்காக வடக்குக் கிழக்கில் எனது துறைசார்ந்த கல்வியை மேற்கொள்ள **IIS** நிறுவனத்தினால் நடாத்தப்படும் HND கற்கை நெறியினைத் தெரிவு செய்தேன். இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்ததும் சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் 3ம் வருட கல்வியைத் தொடரவுள்ளேன்.

**BTEC HND**
World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

BSc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK,USA,Australia,Canada etc

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

**New Batch Starts on 19.01.2005 at 10.00 a.m.**

edexcel INTERNATIONAL
Approved Training Centre

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
# 100, Clock Tower Road, Jaffna.
P No. : 021 222 2831 / 021 222 6933

அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS

## Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை
யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

அனைத்து கற்கைநெறிகளிற்கும் 80% புலமைப்பரிசில் வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

**80% OFF**

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Honours Diploma in Computer Science | 4 மாதம் | ~~8,000~~ | 1,600 |
| Diploma In WebPage Designing | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Diploma in Graphic Designing | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Diploma In Desktop Publishing | 4 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Diploma in Hardware Engineering | 3 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Diploma in AutoCAD | 3 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Accounting Package | 3 மாதம் | ~~7,000~~ | 1,400 |
| MS Office | 3 மாதம் | | 500 |

**Advances Courses**

**50% OFF**

| Course | Old price | Price |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma In Multimedia | ~~5000~~ | 2500 |

January 30th இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 16/01/2005
Batch II - 22/01/2005
Batch III - 24/01/2005
Batch IV - 30/01/2005

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்,
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781

(C/3529)



# மாணவர்களே சிந்தியுங்கள்!!! ?

உங்களது நேரம்!, உங்களது பணம்!, உங்கள் பெற்றோரின் எதிர்பார்ப்பு! இதற்கும் மேலாக உங்களது எதிர்காலம்!!!
ஆகவே நீங்கள் கற்கவேண்டிய கணணி நிறுவனத்தையும், அதன் வினைத்திறனையும், கற்கைநெறிகளின் தரத்தையும், தன்மையையும் சீர்தூக்கித் தெரிவுசெய்யுங்கள்.....

கணனித்துறையில் தேர்ச்சிபெற **E-TOUCH COMPUTER SYSTEM**
உங்களுக்கு வழங்கும் சலுகைகளிற் சில.....

அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் இலகு தமிழ் விளக்கத்துடன் ஆழமான, உங்கள் புரிந்துகொள்ளும் திறனுக்கேற்றவாறான கற்பித்தல்...
சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், ஒப்பந்த அடிப்படையிலான பயிற்சிக்காலத் தொழில்வாய்ப்புக்கள்.....
சர்வதேச கணனித் தரத்திற்கமைவான இலவச கணனி பாடநூல்கள், பயிற்சி நூல்கள், Floppy Disk / CD...
அதிகூடிய செய்முறைப் பயிற்சிகளுடன், கணனிசார் தொழில்வாய்ப்புக்கான வழிகாட்டல்கள்...
வார, வார இறுதி, மாலை, இரவுநேர வகுப்புக்கள் (காலை 9.00 – இரவு 9.30)...
ஒவ்வொரு வாரமும் கற்கைநெறிகள் ஆரம்பமாகும் (குழு, பிரத்தியேக வகுப்பு வசதிகள்)...
சகல மாணவருக்கும் கற்கைநெறிக்குப் பிந்திய வினைத்திறன் மேம்படுத்தும், கணனிப்பாவனை வசதிகள்...
மாணவருக்கான மட்டுப்படுத்தப்பட்ட PRINTING, SCANNING, CD WRITING & COMPUTER HANDLING வசதிகள்...
இன்னும் பல........

புதிய பிரிவுகளிற்கான பதிவுகள் யாவும் 01-01-2005 முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

உங்களின் தெரிவுக்கு எங்களது கற்கைநெறிப்பொதிகள்
(Based on International Computer Skill Syllabus).....

**RIGHT WAY** ... **TO TOUCH IT**

### DIPLOMA IN MS OFFICE
- Introduction to DOS/Windows
- Introduction to IT
- Basic Computer handling Methods
- MS Word
- MS Excel
- MS Access
- MS PowerPoint
- Introduction to Printing & Scanning.

### DIPLOMA IN DTP
- Introduction to DOS/Windows
- Introduction to IT
- Basic Computer handling Methods
- CorelDRAW 11&12
- Corel PHOTO-PAINT
- Adobe Photoshop 7 & 8
- Adobe Page Maker
- Introduction to Printing & Scanning.

### DIPLOMA IN AUTOCAD
- Introduction to DOS/Windows
- Introduction to IT
- Introduction to Engineering Drawing
- Basic Drawings (Entries &Scaling)
- Site Planning (Normal & Isometric)
- Building Planning & Construction
- 3D Modeling & Rendering
- Mechanical Drawing

### DIPLOMA IN PROGRAMMING
- Introduction to DOS/Windows
- Introduction to IT
- Introduction to Number System
- System Analysing
- C/C++
- Visual Basic
- Java
- Introduction to Oracle

### DIPLOMA IN HARDWARE
- Structured & Function of Windows
- File Directory & Disk Management.
- Installation Configuration & Upgrading
- Application, Device Drivers & Utilities
- Diagnosis & Troubleshooting
- Internet Access & Network Connectivity
- Printers & Portable Computers
- Introduction to Printing & Scanning.

### DIPLOMA IN MULTIMEDIA
- Introduction to Graphic Animation
- Cool 3D
- Ulead Gif Animator
- Ulead Video Studio
- Ulead Media Studio-Directors Cut
- Macromedia Authorware (Application Creator)
- CD Burning Software
- Introduction to Printing & Scanning.

விபரங்களுக்கு.

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"

(C/3528)

E-TOUCH, உடுவில் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம் 021-4590222

## திரை விமர்சனம்

# ஏய்

தொடர்ந்து சரத்குமார் தருகின்ற ஒரே பாணிப் படவரிசையில் இதுவும் ஒன்று. வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்யும் சரத்குமார் மற்றும் தபாற்கந் தோரில் வேலை செய்யும் நமீதாவின் மனதில் காதலனாகப் புகுகிறார். ஆரம்பத்தில் அப்பாவியான சரத் குமார் இறுதியில் பொங்கி எழுகின்றார்.

ஆரம்பத்தில் இராணுவத்தில் பணியாற்றிய சரத்குமார் உள்ளூர் ரவுடிகளால் நண்பன் கலாபவன் மணியை இழக்கின்றார். இதனால் பெரிய மனிதரான, பெரிய ரவுடி கோட்டா சீனிவாசராவின் கையையும், காலையும் எடுத்துவிட்டு பழனிக்கு வருகின்றார். (பாட்ஷா படம் பார்த்த மாதிரி இல்லை!!)



பழனியில் இவர் இருப்பதை அறிந்த வில்லன் இவரைக் கொலை செய்ய முனைகின்றார். இதில் சரத் வென்றாரா? இதுதான் படம்.

படத்தில் சரத்குமார் முதல் பந்தியிலேயே கிளீன் போல்ட். ஆனால், வடிவேலுவின் நகைச்சுவை படத்தைக் காப்பாற்றியிருக்கிறது. நமீதா ஓரளவு படத்தில் நடித்து படத்தைக் காப்பாற்றுவார் என்று பார்த்தால் அவரும் ஏமாற்றிவிட்டார்.

நடிகை மும்தாஜ் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடிவிட்டுச் செல்கின்றார். இது தேவையா? ஸ்ரீகாந் தேவாவின் இசையில் பாடல்கள் ஒன்றும் கேட்கும் படியாக இல்லை. கதை - திரைக்கதை - வசனம் - இயக்கம் வெங்கடேஷ் ஆனால் ஒன்று கூட உருப்படியாகச் செய்யவில்லை என்றே தோன்றுகின்றது.

'ஏய்' ஏமாற்றிவிட்டது.

- சிவமதி-

# தடையாகும் செயற்கை சிகிச்சை முறை

அமெரிக்காவில் ஓர் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற ஆராய்ச்சிக் குழுவினர் செயற்கையாகச் செய்யப்படுகின்ற எல்லா மருத்துவ முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டுள்ளனர். இதன் மூலம் பலதரப்பட்ட நோய்களையும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாமென, அவர்கள் நம்புகிறார்கள். அண்மையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம்– செயற்கையாகச் செய்யப்படுகின்ற இதயம் மற்றும் ஈரல் மாற்றுச் சிகிச்சை பக்றீரியாக்களின் தாக்கத்துக்கும், வைரஸ்களின் தாக்கத்துக்கும் உட்படுவதாக கருதப்படுகிறது. இதன் காரணமாக அங்கே நோய்க்கான மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டாலும்கூட, அந்தநோய் குணமாகாமல் அவதிப்படுபவர்கள் தான் அதிகமாக உள்ளார்கள். சில நாடுகளுக்கு அறுவைச் சிகிச்சை என்பது வெற்றியளிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில், அங்கே காணப்படுகின்ற பலதரப்பட்ட காலநிலை மாற்றங்கள் நோய்களைக் குணமாக்கக் கூடிய இயல்புகளைக் கொண்டவையாகும்.



# உளவு ரொக்கட்



இவ்வளவு காலமும் ஏவப்பட்ட ரொக்கட்டுக்களிலேயே மிகப்பெரிய ரொக்கட் டெல்ட்டா 4 என்பதாகும். இது புளோரிடா மாநிலத்திலிருந்து விண்வெளிக்கு ஏவப்பட இருக்கிறது. முற்றுமுழுதாகச் சொல்லப்போனால், இது எந்தவிதமான விண்வெளி ஆய்வுகளுக்கோ மற்றும் வர்த்தகத் தேவைகளுக்கோ பயன்படமாட்டாது எனக் கூறப்படுகிறது. ஏறக்குறைய 70 மீற்றர் உயரம் கொண்ட இந்த ரொக்கட் இராணுவ உளவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட இருக்கிறது. இந்த ரொக்கட்டின் உற்பத்திக்கு இரண்டு பல்கலைக்கழகங்கள் உதவி வழங்க இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதேவேளை அட்லஸ் – 5 என்ற ரொக்கட் ஒன்றும் விண்வெளிக்கு செலுத்தப்பட இருந்தது. அப்போது காணப்பட்ட மோசமான காலநிலை மற்றும் வானிலை காரணமாக அதனுடைய பயணம் பாதிப்படைந்தது. இதேபோன்று அதாவது டெல்ட்டா – 4 போன்ற ஒத்த அமைப்புடைய ரொக்கட் ஒன்று கடந்த 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு இருந்தது. ஆனால் அது நடுவானில் வெடித்துச் சிதறியது இந்த முயற்சிக்கு ஏற்பட்ட தோல்வி என்றே கூறவேண்டும்.

# அழிவு தரும் காலநிலை

சர்வதேச அளவில் மிகப்பெரிய பூகம்பங்களும், கடல் கொந்தளிப்புக்களும் நிகழப் போகின்றது என்ற ஆய்வு முடிவு ஒன்றை அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. இது நேற்று முன்தினம் தென்னாசியாவில் இடம்பெற்ற இயற்கை அழிவுகளுக்கு கட்டியம் கூறுவது போலுள்ளது. இயற்கையின் சீற்றத்துக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அதில் மிகவும் முக்கியமானது ஓசோன்படையில் ஏற்பட்ட துவாரத்தால் உண்டாகிய வெப்ப விளைவு. அத்துடன் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியாதளவுக்கு கால நிலை வேறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அத்துடன் துருவப் பகுதிகளில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்களை முன்பு கூறியதுபோல கூறமுடியாதிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. துருவப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற சடுதியான கால நிலைமாற்றங்கள்தான் புவியின் மற்றைய பகுதிகளுக்கும் பரவியிருக்கிறது எனக் கூறப்படுகிறது. ஆனாலும் ஓசோன்படையை ஆராயும் விஞ்ஞானிகள் நைதரசனீரொட்சைட்டினுடைய செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்ததால், கனமழை மற்றும் புயல் ஆகியவற்றுக்கான காரணம் அதிகம் இருப்பதாகவும் 1960, 1970 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட காலநிலை அழிவுகள் மீண்டும் ஏற்படவாய்ப்புண்டு எனவும் கூறப்படுகிறது.



# நோயைத் தரும் மொபைல்போன்

பெற்றோல் நிரப்பு நிலையங்களில் மொபைல் கையடக்கத்தொலைபேசிகளின் பாவனை தடைசெய்யப்பட்டிருப்பது யாவருமறிந்த விடயம். ஆனால் தற்போது மொபைல் தொலைபேசிகளில் வானொலி அலைகளின் காரணத்தால் எமது உடலின் கலங்கள் பாதிக்கப்படக்கூடும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் மக்களுக்கு இதனைப் பற்றிய அறிவும் அவ்வளவாக இல்லை எனவும் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள். உலகின் ஏறத்தாழ 1.5 பில்லியன் மக்கள் கையடக்கத்தொலைபேசிகளைப் பாவித்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு சாரார் கையடக்கத்தொலைபேசிகளில் வானொலி அலைகள் – உடலுக்குத் தீங்குவிளைவிக்கும் எனின் சாதாரண வானொலி அலைகள் தீங்கு விளைவிக்க மாட்டாதா எனக் கேட்கின்றார்கள். உண்மையில் கையடக்கத்தொலைபேசிகளின் வானொலி அலைகள் மிகவும் மோசமான அதாவது –புற்று நோயைக் கூட ஏற்படுத்துமளவுக்கு தாக்குகின்றன. இதன் காரணமாகச் சில ஐரோப்பிய நாடுகளில் மொபைல் தொலைபேசிகளின் பாவனை குறைந்து வருகிறது எனத் தொழில் நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் அதிகம் மொபைல் போன்களைப் பாவிப்பவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படுவதாகவும், அத்துடன் அவர்களுக்கு ஏற்படுகின்ற நோய்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதாகவும் மருத்துவவியலாளர்கள் கூறுகின்றார்கள்.




# நாஸாவின் கிளை விண்வெளியில்





சந்திரனில் வைத்து ஒரு ஏவுகணை ஒன்றைச் சோதித்துப் பார்த்தால் என்ன என்ற ஒரு ஆசை அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் பூமியில் வைத்து ஏவுகணைகளைச் சோதிக்கும் போது, அதனுடைய இரகசியங்கள் கசியக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதன் காரணமாக சில இரகசிய சோதனைகளை அண்டவெளியில் வைத்துச்செய்தால் என்ன என்ற முடிவுக்கு புஷ் நிர்வாகம் தலைப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்றபடி அமெரிக்க ஏவுகணை மையத்தின் ஒரு ஆய்வுக்குழு தங்களுடைய ஆய்வுகளை எல்லாம் மூட்டைகட்டிக்கொண்டு சந்திரனுக்குப் பறந்திருக்கின்றது. இவர்களுடைய நோக்கம் நாஸாவின் விண்வெளி கூடத்தில் ஒரு கிளையிலே சந்திரனில் நிறுவுதல் ஆகும். பல மில்லியன் டொலர்கள் செலவில் அமைய இருக் கின்ற இந்த விண்வெளிக் கூடத்தில் தன்னிச்சையாக இயங்கக் கூடிய வகையில்தான் எல்லாக் கருவிகளும், அமைப்புக்களும் இருக்கும் எனக்கூறப்படுகிறது. இப்படியான அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு நாஸா ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியிருக்கிறது. 3 கம்பனிகள் இந்தத் திட்டத்தை எடுத்து எப்படி விண்வெளியில் வைத்துப் பரிசோதனை செய்யலாம் என்ற முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளன.

# செம்மலையில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாயாற்று கிராமத்தில் அபிவிருத்திக்கான ஆரம்பவிழா

நாயாற்றுக் கிராமத்தின் செம்மலை கிழக்கு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மக்களையும், கிராமத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்ட ஆரம்ப விழா கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணிகு நாயாற்று கிராம கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தால் அமைககப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட மாவட்ட இணைப்பாளர் ஏ.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - மங்கள விளக்கை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், தமிழழ காவல்துறை நாயாற்று தடை முகாம் பொறுப்பாளர் சிவசிறி, துணுக்காய்ப் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் அளம்பில் பிரதேசப் பொறுப்பாளர் யாழ்மன்னன் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வு மாவட்டப் பணிப்பாளர் செல்வம் ஏற்றிவைத்தார்.

திட்டத்துக்கான பெயர்ப் பலகையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

சுமார் 4 மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தியிடம் பெற்று, நிகொட் நிகொட் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாகவே இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

இந்த நிகழ்வின் - வரவேற்புரையை கிராம புனரமைக்குழுத் தலைவர் மயில்வாகனமும், சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வே. சிவனடியாரும் நிகழ்த்தினர்.

நிகொட் திட்ட சமூக அபிவிருத்தி இணைப்பாளர் நவநீதன், கடற்புலிகளின் அரச கட்டமைப்புத் தொடர்பாளர் சிலம்பரசன், துணுக்காய் வலய தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் மூர்த்தி, நிகொட் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ரவி, கிராம அலுவலர் அமிர்த ராஜினி, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் அலுவலக பிரதம லிகிதர் ஆகியோர் உரையாற்றினர்.

சிறப்பு கருத்துரையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நிகழ்த்தினார்.

நன்றியுரையை பிரதேச சமூக அபிவிருத்திக் கிராமிய இணைப்பாளர் கணேஷ் வழங்கினார்.

தொடர்ந்து பல தேவைகளைக் கொண்ட பொதுநோக்கு மண்டபத்துக்கான அடிக்கல்லை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாட்டினார். இந்த நிகழ்வில் பிரமுகர்கள் உட்பட கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நினைவு மரக்கன்றுகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர், கிராம மக்கள் சார்பில் விஜயராணி, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்ட இணைப்பாளர் ஏ.சுதர்சன் ஆகியோர் நாட்டினர்.

சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர், இந்தக் கிராமத்தில் தற்போதுதான் இவ்வாறான அபிவிருத்திப் பணி நடைபெற்றதால், மக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## 150 வீடுகள் சேதம்

மன்னார் பிரதேசத்தில் 150 இற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவ நடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டுள்ளன.

மன்னார் - மினுக்கன், தாமரைகுளம், வேட்டாம்முறிப்பு ஆகிய பிரதேசங்களில் 150 இற்கும் மேற்பட்ட வீடுகள், பொதுக்கட்டடங்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம், 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை, எறிகணை வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சு போன்றவற்றின் மூலம் சேதமாக்கப்பட்டுள்ளன எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# 316 வீடுகள் கட்டுவதற்கு உலக வங்கி நிதியுதவி

உலக வங்கியின் வீட்டுத்திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு 100 வீடுகளுக்கான நிதிவழங்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் கரைத்துறைப்பற்றில் 50 வீடுகளும், மாந்தை கிழக்கில் 25 வீடுகளும் ஒட்டுசுட்டானில் 25 வீடுகளும் அமைக்கப்பட்டன. இதன் வேலைகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில் 2005 ஆம் ஆண்டில் இந்த மாவட்டத்தில் 316 வீடுகளை அமைப்பதற்கான நிதியை உலக வங்கி வழங்கியுள்ளது.

இதன் கட்டுமானப் பணியையும் மக்களின் பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளவுள்ளது. இதில் துணுக்காய்ப் பிரதேசத்தில் கோட்டை கட்டிய குளம் கிராமத்தில் 30 வீடுகளும், தேறாங்கண்டலில் 20 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேசத் செயலர் பிரிவில் பூவரசங்குளம் கிராமத்தில் 36 வீடுகளும், கரும்புள்ளியானில் 30 வீடுகளும் மொத்தமாக 66 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒதியமலையில் 35 வீடுகளும், பெரிய குளத்தில் 15 வீடுகளும் கரைத்துறைப் பற்றுப் பிரதேசத்தில், கள்ளப்பாட்டுக்கிராமத்தில் 45 வீடுகளும், ஆறுமுகத்தான் கிராமத்தில் 20 வீடுகளும், புலக்குடியிருப்பில் 20 வீடுகளும் மொத்தமாக 85 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குரவில் கிராமத்தில் 26 வீடுகளும், வேணாவில் கிராமத்தில் 15 வீடுகளும, வசந்தபுரத்தில் 24 வீடுகளும் மொத்தமாக 65 வீடுகளும், அமைக்கப்படவுள்ளன. என, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கிராமங்களை அந்தந்தப் பிரதேச உதவி அரச அதிபர்கள் தெரிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 530 குடும்பங்களுக்கு உதவிப் பொருட்கள்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 530 குடும்பங்களுக்கு உணவில்லாத உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. வன்னிப் பகுதியில் பெய்த தொடர் மழையால் பாதிக்கப்பட்ட கண்டாவளைப் பிரதேசத்துக்குட்பட்ட 530 குடும்பங்களுக்கு ஒக்ஸ பாம் நிறுவனத்தால் உணவில்லாத உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் நாகேந்திரபுரத்தில் 93 குடும்பங்களுக்கும் ஆனையிறவில் 8 குடும்பங்களுக்கும், கல்மடுநகரில் 88 குடும்பங்களுக்கும் உமையாள் புரத்தில் 72 குடும்பங்களுக்கும், கோரக்கன்கட்டில் 100 குடும்பங்களுக்கும், முரசுமோட்டையில் 29 குடும்பங்களுக்கும் பெரியகுளத்தில் 65 குடும்பங்களுக்கும் இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

# வவுனியா ரயில் நிலைய ஊழியர் விடுதியின் கிணற்று நீர்மாசடைந்துள்ளதாக முறைப்பாடு

வவுனியா ரயில்நிலையத்தில் கடமைபுரியும், ஊழியர் வசித்து வரும் விடுதிக்கு நீர் வழங்கும் கிணற்று நீர் மாசடைந்துள்ளது. ஒரு வருடத்துக்கு மேலாக கிணற்று நீரை சுத்தம் செய்யாததால் இதில் ஒருவகைப் புழுக்கள் பெருக ஆரம்பித்து விட்டதாக விடுதியில் வசிக்கும் மக்கள் ரயில் நிலைய அத்தியட்சகரிடம் முறையிட்டுள்ளனர்.

இந்த ரயில் நிலையத்திலிருந்து தெற்கே சுமார் 500 யார் தூரத்தில் இந்த விடுதிகள் மிகவும் நெருக்கமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுதியில் வசிக்கும் மக்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகவேயுள்ளது. இந்த விடுதியில் 40 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்த விடுதிக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டு கிணறுகளிலிருந்து அதாவது குடிநீரும் மற்றும் வேறு தேவைக்கு பயன்படும் நீரும் தேவைக்கு பயன்படுத்தப்படும் நீரும் ஒரே குழாய் மூலம் வழங்கப்படுவதால் தாம் இவ்வாறான சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும், இந்த மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். குடிநீர் எப்போது வருகின்றது வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படும் நீர் எந்நேரத்தில் வருகின்றது என்பதை அறியமுடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தப் பகுதி கால்வாயகளில் கழிவு நீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# செம்மலைக் கிராமத்தில் சமாதான நீதிவான் தெரிவு

செம்மலைக் கிராமத்திலிருந்து சமாதான நீதிவனாக செ.இரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை வவுனியா மாவட்ட நீதிபதி இளைஞ்செழியன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சிறந்த சமூக சேவையாளரும். மாணிக்கப்பிள்ளையார் ஆலயத் தலைவரும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், செம்மலை மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளரும். முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவருமாக இருந்து மக்களுக்கு பணியாற்றி வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் இந்த மாதம் தொடக்கம் தனது பணியை ஆரம்பித்துள்ளார்.



நண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த வட்டக்கச்சி நாவலர் வீதியை வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பில் ஈடுபட்டுள்ள மக்களை படத்தில் காணலாம்.
(வட்டக்கச்சி செய்தியாளர்)

# வவுனியா மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் அபிவிருத்திக்கென 134 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சமூக அபிவிருத்தி தொடர்பான மூன்றாண்டுத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், வீதிகள் அபிவிருத்திகளுக்கு 134 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் கல்வி அபிவிருத்திக்கு 65 மில்லியன் ரூபாவும, சுகாதார வேலைத்திட்டங்களுக்கு 49 மில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன வேலைகளுக்கு 10 மில்லியன் ரூபாவும், வீதி அபிவிருத்திக்கான வேலைகளுக்கு 10 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என, வவுனியா செயலக திட்டமிடல் பிரதி பணிப்பாளர் எஸ்.கிருப்பாசதன் தெரிவித்தார்.

இவற்றில் 14 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தத் திட்டத்தின் கீழ் 3 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது. இதில வவுனியா - மதவாச்சிவீதி, வவுன்யா ஓமநதை வீதி, வவுனியா ஹொறவப பொத்தானை வீதி ஆகிய மூன்று வீதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கார்ப் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான முழுமையாக புனர்நிர்மானம் செய்யப்படவுள்ளது.

23 கிலோமீற்றர் நீளமான வவுனியா மதவாச்சி வீதிக்கு 282 மில்லியன் ரூபாவும், 19 கிலோ மீற்றர் நீளமான வவுனியா ஓமந்தை வீதிக்கு 246 மில்லியன் ரூபாவும், வவுனியா ஹொறவப் பொத்தானை வீதிக்கு 35 கிலோமீற்றர் 499 மில்லியன் ரூபாவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 15 கிராமங்களுக்கு புதிதாக மின் இணைப்பை வழங்க 62 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கோதுமை மா தட்டுப்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள், தனியார் கடைகளில் கோதுமை மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கோதுமை மா தட்டுப்பாடு காரணத்தால் பாணுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிக் கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளின் வாரமொன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு 3 கிலோ கோதுமை வழங்கப்படுகிறது. (21)

## கல்வியியல் கல்லூரியின் நேர்முகப் பரீட்சை

(வவுனியா)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு அடுத்த ஆண்டு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை, ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது என, வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கே.பேனாட் தெரிவித்தார்.

இந்த கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுடைய ஆவண மூலப் பிரதிகளுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்*
*உள்ளத்தின் உள்ளக் கெடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கருணையினால் மட்டுமல்ல... கடமையுணர்வுடனும் கூட...!

நேற்று முன்தினம் ஏற்பட்ட கடற் கொந்தளிப்புக் காரணமாக உருவான மனிதத்துயரம் தொடர்ந்து கொண்டேபோகிறது.

திசையெங்குமிருந்து வரும் மனிதப் பேரவலத்தின் பேரோசை அதனை ஏற்படுத்திய கடல் அலையோசையிலும் பன்மடங்கு அதிகமாகி, இதயங்களை ஊடுருவி, தாங்கிக்கொள்ள முடியாத தொடர் வலியை ஏற்படுத்திய வண்ணமுள்ளது.

இயற்கைத் தாய் இவ்வளவு இதயமற்றவளாக இருப்பாள் என எவரும் கற்பனை செய்துபார்த்தது கூட இல்லை.

இந்த மாதிரியான அவலமும், இந்த அளவிலான உயிரிழப்பும் இப்படிப்பட்ட பேரழிவும் அண்மையில் உலகெங்கும் நிகழ்ந்ததுகிடையாது. அதுவும் இலங்கையில் இயற்கையின் சிற்றம் இந்தளவுக்கு மனித உயிர்களைக காவுகொண்ட சமீபகால சம்பவம் வரலாற்றில் எதுவுமேயில்லை.

நிமிடத்திற்கு நிமிடம், ஏன் வினாடிக்கு வினாடி வந்து கொண்டிருக்கும் மரணம் பற்றிய புள்ளிவிபரங்களும் மனிதச் சடலங்களின் கரையொதுங்கல பற்றிய கணக்கும வாழ்வுபற்றிய எதிர்பார்ப்புக்களின் எதிர்கால நம்பிக்கைளை முற்றாகச் சிதைத்தே வருகின்றன.

- மட்டு - அம்பாறையில் ஆயிரம் பேர்...

- முல்லைத்தீவில் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமானோர்...

- யாழ். குடாவில் இரண்டாயிரத்திற்கும் மேலானோர்...

- தென்னிலங்கையில் பல நூற்றுக் கணக்கானோர்...

- கிழக்கில் பல்லாயிரவர்...

- இந்தோனேஷியா... முதல் இந்தியா வரை மேலும் எண்ணிக்கையற்றோர் ஒரேநாளின் சில மணித்துளிநேர அனர்த்தத்திற்கு பலியாகிய கொடூரம் ... ஒரு போதும் அறியாத ஒன்றே.

இந்த துயரத்தில் - இந்த இழப்பில் இருந்து நாம் பாதிக்கப்பட்ட எமது மக்களை எவ்வாறு ஆறுதல் படுத்தபபோகிறோம்? இதுவே இப்போதுள்ள பெரும்கேள்வி.

இயற்கையின் சீற்றம் இன்னமும் முற்றாகத் தணியவில்லை...

கடலில் ஆழ் மடி உறங்கும் எரிமலையின் தன்மையுடன மீண்டும் சீறிக் கிழம்பக் காத்திருக்கக் கூடும் என்ற அச்சமூட்டும் ஊகங்களும், எதிர்வு கூறல்களும், மனித மனங்களில் இன்னமும் பீதியை ஏற்படுத்திவரும் நிலையே தொடர்கிறது.

ஆனால், சக மனிதரின் துயரம் போக்க இழப்புக்களின சோகத்தில் இருந்து அவர்களை மீட்க, உணர்வுள்ள ஏனைய மனிதர்கள் உணர் வெழுச்சியுடன் வெந்து நொந்த மனத்தை புறமொதுக்கி, வேகமாக இயங்கத தொடங்கியுள்ளமை வேதனைக்குள்ளும் நிறைவுதரும செய்தியாகும்.

அனர்த்தம் நிகழ்ந்த அடுத்த சில மணி நேரத்துக்குள்ளேயே அழுதகண்ணும் சிந்திய மூக்குமாகப் மீட்பு பணிகளில் - நிவாரணப்பணிகளில் இறங்கிய மக்களின் உணர்ச்சி வெள்ளத்தைப் பார்க்கும்போது மனம் நம்பிக்கை கொள்கிறது.

மனிதத் துயர்களைய மனிதர் முன்வராவிட்டால் வேறு யார் உதவுவார்கள்?

மாணவர்கள், இளைஞர்கள், பொதுஅமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், மத அமைப்புக்கள் என உதவ வரும் மனித சக்திக்கு, இது ஒரு மாபெரும்சவாலே...

இந்த மக்களை ஆறுதல் படுத்தி இயல்புநிலைக்கு கொண்டுவருவதென்பது இலகுவில் முடியாத காரியமே! இழப்புக்களின் தன்மை அப்படியானதே...!

ஆனாலும், நம் மக்களுக்கும் எப்போதும் நாம்தான துணையாக இருந்து வந்துள்ளோம். இப்போதும் அப்படித்தான் இருக்க வேண்டிய நிலை...

ஒரு நாட் பொழுதுக்குள் எத்தனை உதவிக் கரங்கள நீண்டு உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம என உறுதி கூறுகின்றன.

மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், மாணவர் ஒன்றியங்களும், ஏனைய பொது அமைப்புக்களும் தாம தமின்றி இயங்கத் தொடங்கியுள்ளன.

மருத்துவ சேவைகளில் மருத்துவர்களுடன் மருத்துவ பீட மாணவர்களும் சேவையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இரத்ததானத்திற்கு அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, தொடரும் மழை - நிவாரணப் பணிக்கு இடையூறாக இயற்கை ஏற்படுத்தும் தடையாக உள்ள தாகவும் கூறப்படுகிறது.

ஆனாலும் மனிதநேயப் பணிக்கு இயற்கை புறந் தள்ளி செயற்படல் அவசியமாகிறது.

எமது மக்களின் இதயம் - இழப்பின் துயரில் துடிப் பதுமட்டும் போதாது. துயருறும் மக்களுக்காகவும் துடிக்கவேண்டும்.

எமது கைகள் திறக்க வேண்டும். எமது ஈகைசிறக்க வேண்டும். இது கருணையினால் ஏற்படுவதாக மட்டும் இருக்கக் கூடாது. எமது கடமையுணர்வின் - துடிப்பின - வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும்.

## நாடும் நடப்பும்




### ஊர்சுற்றியார் பார்வையில்...

# இயற்கையின் சீற்றமும் உதவியின் பெரும் நன்மையும்

லெமூராக் கண்டத்தை கடல்கொண்டதாக நூல்களில் படித்திருக்கிறோம், அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

பூமியதிர்ச்சி என்றும் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து பலர் பலியென்றும் பத்திரிகைகளில் அடிக்கடி படித்திருக்கிறோம்.

வெள்ளப்பெருக்கும் அதனால் ஏற்படும் பேரழிவுகள் பற்றியும் ஊடகங்கள் மூலம் அறிந்திருக்கிறோம்.

அகதிகளாகப் படகுகளில் சென்று அலை கடலில் சிக்கி உயிரிழந்தவர்கள் போக, உயிர் தப்பித் திரும்பியவர்கள் கடலில் அலைகளில் சிக்கிய அந்த ஆபத்தான அனுபவங்களைச் சொன்னபோது மூக்கில் விரல்வைத்து அதிர்ச்சியடைந்திருக்கிறோம், ஆச்சரியப்பட்டிருக்கிறோம்.

கதையாய், கற்பனையாய் காட்சிகளாகத் தெரிந்தவைகள் கண்முன்னே கோரமாகப் பார்க்கும் கொடுமை இந்த நூற்றாண்டின் நான்காவதாண்டின் இறுதியில் ஏற்பட்டிருக்கறது.

இயற்கையன்னையின் சீற்றத்துக்குள்ளாகி மக்கள் அல்லோலகல்லோலமாகி நிற்கின்றனர்.

கடல் கொண்டுபோனவர்களின் எண்ணிக்கை தெரியாது. மாண்டவர்களின் சடலங்கள் இன்னமும் கரையொதுங்கிக் கொண்டிருக்கின்றன.

மாடமாளிகைகள்கூட இடிந்து தரைமட்டமாகிக் கிடக்கின்றன. குடிசைகள் இருந்த இடம்தெரியவில்லை.

ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்த பிஞ்சுக் குழந்தைகள என்ன குற்றம் செய்தன? அவர்களுக்கு ஏன் இந்த அவலமுடிவு.

இனி இழப்பதற்கு ஒன்றுமில்லையென்ற நிலையில் உயிர் தப்பியோர் உடுத்த துணியுடன் நிர்க்கதியாக ஒருநேர உணவுக்குக் கையேந்தும் நிலையில் நிற்கின்றனர். உடுக்கத் துணியில்லை, உறங்குவதற்கு இடமுமில்லை.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று இயற்கை அன்னை பேதம் பார்க்கவில்லை.

பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என்று இயற்கை மதவேறுபாடு பார்க்கவில்லை.

சிங்களவன், தமிழன், இஸ்லாமியன், பறங்கியன் என்று பொங்கியெழுந்துவந்த கல் அலைகள் வித்தியாசம் காட்டவில்லை.

இப்பொழுது பாதிக்கப்பட்டவர்கள், இயற்கையின்கோர அனர்த்தத்தில் அகப்பட்டவர்கள் எல்லோருமே மனிதர்கள் தான். மாணவர்கள் அனைவருமே பிணங்கள், சடலங்களாகவே காணப்படுகின்றனர்.

இயற்கையின் கோர அனர்த்தத்தில் உயர் வலயப் பாதுகாப்பும் அனுமதியில்லாமல் உள்ளே பிரவேசிக்கமுடியாதவர்களும் இப்போது ஒரே தரத்திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டனர்.

நான் பெரிது, நான் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன், அவன் சிறியவன் என்ற நிலையை இயற்கையின் கோரத் தாண்டவம் ஒரே நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

இயற்கையின் சீற்றத்துக்கு உள்ளாகாமல் தப்பியிருப்போர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்து அவர்களைக் கைதூக்கி விடவேண்டியது அவர்களுக்குரிய கடமையும் பொறுப்புமாகும்.

இந்த அவல நிலையிலும் அகப்பட்டதைச் சுருட்டிக் கொளளையடிப்பதிலும் சில பகுதிகளில் சிலர் ஈடுபட்டதாகக் கிடைக்கும் செய்திகளைக் கண்டு வெட்கப்படுவதா? வேதனைப்படுவதா? இவர்களையும் மனிதர்கள் என்று சொல்வதா?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகோரி உலக சமுதாயத்துக்கு இலங்கை ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அயலிலுள்ள இந்தியா உடனடியாக உதவிக்கு முன் வந்திருக்கிறது. தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும், மக்கள் பெருமளவில் இந்த இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் இலங்கைக்கு உதவியளிக்க அது முன்வந்திருப்பதை நன்றியுடன் பாராட்டவேண்டும்.

இதேசமயம் அரசின் உதவியை எதிர்பாராமலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, பிரதேச வேறுபாடில்லாமல், உடனடியாகவே தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வந்து உதவி அளித்துக்கொண்டிருக்கும் மக்களையும், நிறுவனங்களையும் நன்றியுணர்வுடன் பாராட்டவேண்டும்.

இன, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி இயற்கை அனர்தத்தால பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்யும்படி தமது போராளிகளுக்குப் பணித்து, அவசர உதவியளித்த தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுடைய மனிதாபிமானத்தை இலங்கை மக்கள் உணர்ந்து கொண்டால் போதும்!

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியமுன்வருமாறு உலக சமுதாயத்துக்கு மட்டுமல்ல, உள்நாட்டிலுள்ள அமைப்புக்களுக்கும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க வேண்டுகோள் விடுத்திருந்தார்.

சந்திரிகா அம்மையார் தமது இந்த வேண்டுகோளைத் தமிழ் மக்களின் தலைசிறந்த அமைப்பாக விளங்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் விடுத்திருந்தால் தேசிய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அவர் விடுத்த ஒரு அழைப்பாகக் கருதுவதற்கு வாய்ப்பேற்படுத்தியிருக்கும்.

இயற்கை அன்னை' காட்டாத வேறுபாட்டை சிறிலங்காவின் அன்னை காட்டி நல்ல சந்தர்ப்பத்தைத் தவறவிட்டிருக்கிறார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் அழைப்பை தேசியத் தலைவர் பிரபாகரன் எதிர்பார்க்கவில்லை, அதற்காகக் காத்திருக்கவுமில்லை. இனம், மதம், மொழி, பிரதேசம் என்ற வேறுபாடில்லாமல் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் உதவும்படி தமது போராளிகளுக்குப் பணித்தனுப்பியிருப்பதன் மூலம், சிறிலங்காவின் தலைமைக்குமே வழிகாட்டியிருக்கிறார்.

இயற்கையன்னை மக்களுக்கிடையில் காட்டாத பிரதேச, மொழி, இன, மத வேறுபாடுக்ளை சிறிலங்கா அதிபர் காட்டியிருக்கிறார். தமிழீழ தேசியத் தலைவர் காட்டாத வேற்றுமையை சிறிலங்கா அம்மையார் காட்டியிருக்கிறார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேச சமுதாயம் இனியளிக்கும் உதவிகளையும், பிரதேச, இன, மொழி, மத வேறுபாடுகள் பார்க்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கே கிடைப்பதற்கு சிறிலங்கா அதிபர் வழிசெய்ய வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து கோதுமை மாவுக்கே வழியில்லாமல் மக்கள் தவித்துக்கொண்டிருக்கின்றனர். அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வைத் தாங்கமுடியவில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு வாக்குறுதியளித்தபடி சம்பள உயர்வை வழங்கமுடியவில்லை. போக்குவரத்துச்சேவையில் நஷ்டம், சேவைகளை சீராக நடத்த முடியவில்லை. சகலதுறைகளிலும் ஊழலும், சீர்கேடும் மலிந்துவிட்டன. பொருளாதார நெருக்கடி காரணமாக ஆட்சியிலுள்ள கூட்டமைப்புக்குள் கருத்துவேறுபாடு.

இவற்றுக்கெல்லாம் தீர்வு காண்பதற்கு 'வாராதுவந்த மாமணி போல' இயற்கையன்னையின் சீற்றம் வந்து கோரத் தாண்டவம் புரிந்து, நமக்கு சர்வதேச உதவி கிடைக்கபபோகிறது என்று சிறிலங்கா அரசு திருப்திப்பட்டுவிடக் கூடாது.

இலங்கைக்கு உதவி நாடுகள் வழங்குவதற்கு உறுதியளித்த கோடிக்கணக்கான ரூபா உதவிகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படாமையால் இழுபட்டுக்கொண்டு செல்வது.

இந்த நிதியுதவியைப் பெறுவதற்கு சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து இழுபறி நிலையிலேயே உள்ளன. இந்த நிலையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதறகு சர்வதேச சமுதாயம் அளிக்கும் உதவிகளை நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கப் பயன்படுத்தலாமென்ற சிந்தனை சிறிலங்கா அரசுக்கு வரக்கூடாது.

முன்னர் இப்படி உதவிக்கு வந்த நிதியுதவி பாதிக் கப்பட்ட மக்களுக்குப் போய்ச்சேராத காரணத்தால்தான் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும், புனரமைக்கவும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வேண்டு மென்று விடுதலைப் புலிகள் கேட்கின்றனர் என்பதையும் நினைவுகூரவேண்டும்.

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும், ஆனந்த விகடனில் பிரசுரமான கட்டுரை

# போர்நிறுத்தத்தால் தமிழ் மக்களுக்கு நிரந்தர நன்மை கிடைத்துவிடவில்லை





இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தேன். விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் தமிழ்ச் செல்வனையும் சந்தித்தேன். இந்த இரண்டு தரப்பும் மீண்டும சந்தித்துப் பேசும் வாய்ப்பு பிரகாசமாக இலலை! என்று சொல்லியருக்கிறார் எரிக். இரு தரப்புக்குமான அமைதிப் பேச்சுவார்த்தையில் சமாதானத் தூதராகச் செயறபடும் நோர்வே தேசத்துக்காரர் இவர். மூன்றாண்டு காலம் வெள்ளைக்கொடி பறந்த ஈழத்தில், மீண்டும் ரத்த ஆறு ஓட ஆரம்பிக்கலாம் என்று அதிர்ச்சித் தகவல்கள்!

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நடந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களில், எப்படியாவது ஒரு தீர்வு எட்டப்பட்டுவிடும் என்றுதான், தமிழ்மக்களும், சிங்கள மக்களும் நினைத்தார்கள். ஆனால், அது நடக்கவில்லை. பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கும் அறிகுறியும் தென்படவில்லை. இறுக்கமான சூழலில், ஒரு பெரும் புயலுக்கு முன்பான அமைதியில் இருக்கிறது இலங்கை. ஒரு தோட்டா, ஒரு பீரங்கியின் முழக்கம் மொத்த அமைதியையும் கிழித்துவிடக் கூடிய நிலைமை!

களப் பலியான புலிகள் நினைவாக் கொண்டாடப்படும் மாவீரர் தினத்தில் பேசிய பிரபாகரனின் உரையில் கோபம் கொப்பளித்திருக்கிறது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை அதேசமயம் பிரிந்துசென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறோம். வீடின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபிட்சமின்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது. பொறுமைக்கும், எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. அநத எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் காலம் தாமதிக்காமல் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும். எமது அவசர வேணடுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து எமது மக்களின் துயர வாழ்வை நீடிக்க சிங்கள அரசு முறபடுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர, எமக்கு வேறு வழியிலலை என்ற பிரபாகரனது வார்த்தைகள் அதிர்ச்சி அலைகளைக் கிளப்பியுள்ளன.

'கடந்த மூன்றாண்டுகளாக நீடித்துவரும் போர் நிறுத்தத்தால் இலங்கை அரசாங்கத்துக்குத் தலைவலி குறைந்ததே தவிர, அதனால், தமிழர்களுக்கு எந்த நிரந்தர நன்மையும் கிடைத்துவிடவில்லை' என்ற ஆதங்கம் தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. இப்படியொரு சூழ்நிலையில் போர் தொடங்கினால், அது மிக உக்கிரமாக இருக்கும் என்கிறார்கள்.

கடைசியாகப் புலிகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல கொழும்பு விமான நிலையத்தின்மீது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இரண்டுமணிநேரத் தாக்குதலில் சுமார் 21 புலிகளே பங்கேற்றனர். விமானங்கள், ஹெலிகொப்டர் மற்றும் பிற உட்கட்டமைப்புகள் புலிகளால் சிதைக்கப்பட்டன. அரசுக்கு 1360 கோடி ரூபாய் இழப்பு. அதன் பிறகுதான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இறங்கிவந்தது இலங்கை அரசு. அது போன்ற பெரும் சேதத்தை விளைவிக்கும் அளவுக்குப் புலிகள் இப்போது எல்லா வசதிகளுடனும் இருக்கிறார்கள். எங்களுக்கு தனி அரசு இருக்கிறது. சிங்கள இராணுவத்துக்குச் சமமான, வலுவான இராணுவம் எங்களுடையது. கூடுதலாகக் கடற்படையும் இப்போது முழு வீச்சில் தயார்! என்று அன்ரன் பாலசிங்கம் சொல்லி இருககிறார். நடந்துமுடிந்த தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த 22 எம்.பிக்களும் புலிகளை ஆதரிக்கிறார்கள். இது புலிகளுக்குக் கூடுதல் தெம்பு! என்கிறார்கள். இன்னொரு பக்கம் தர்மசங்கடத்தில் தவிக்கிறது இலங்கை அரசு. போரால் பாதிக்கப்பட்டபகுதி மக்களின் புனர் வாழ்வுக்காக இலங்கை அரசு பல்வேறு நாடுகளில் நிவாரண உதவிகளைக் கேட்டது. சில நாடுகள் தந்து உதவின. மீண்டும் போரென்றால் இந்த நாடுகளின் நிதி அரசுக்குக் கிடைக்குமா? என்பது சந்தேகம்.

**அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சேர்ந்து 'ரோக்கியோ நன்கொடைக் குழு' என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். இவர்கள் கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்திருக்கிறார்கள். 'நோர்வே எடுக்கும் அமைதி முயற்சிக்கு முட்டுக்கட்டை போடவேண்டாம். மீண்டும் போர் ஏற்படாமல் பார்க்கவேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது' என்று இந்தக் கூட்டமைப்பு இலங்கை அரசை எச்சரித்திருக்கிறது. இவர்களின் பேச்சைக் கேட்காவிட்டால், கோடிக்கணக்கான பணம் இலங்கைக்கு கிடைப்பதில் தடங்கல் ஏற்படும். என்ன செய்வதென்று தெரியாமல் நடுக்கடலில் நின்றுகொண்டிருக்கிறார் சந்திரிகா.**

அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சேர்ந்து 'ரோக்கியோ நன்கொடைக் குழு' என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். இவர்கள் கடந்த 16 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்திருக்கிறார்கள். 'நோர்வே எடுக்கும் அமைதி முயற்சிக்கு முட்டுக்கட்டை போடவேண்டாம். மீண்டும் போர் ஏற்படாமல் பார்க்கவேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது' என்று இந்தக் கூட்டமைப்பு இலங்கை அரசை எச்சரித்திருக்கிறது. இவர்களின் பேச்சைக் கேட்காவிட்டால், கோடிக்கணக்கான பணம் இலங்கைக்கு கிடைப்பதில் தடங்கல் ஏற்படும். என்ன செய்வதென்று தெரியாமல் நடுக்கடலில் நின்றுகொண்டிருக்கிறார் சந்திரிகா.

'சநதிரிகா போரிற் குதிப்பார் என்று நான் நினைகக வில்லை. இருபத்தைந்து ஆண்டுகள் பட்டதுபோதும். இனி மேலும் போர் வேண்டாம்' என்று இலங்கை இராணுவத் தகவல் தொடர்பாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்கா சொல்லியருப்பதை வைத்துப் பார்த்தால், 'போருக்கு இராணுவமே தயாராக இல்லை' என்கிறார்கள் இலங்கை பத்திரிகையாளர்கள்.

தன்னைச் சந்தித்த பத்திரிகையாளர் ஒருவரிடம் ஆவேசமாகப் பேசிய புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு அதிரடித் தகவலைக் கொடுத்தாராம்..... 'இனியொரு போர் மூண்டால், நாங்கள் அடிக்கும் அடியில், சந்திரிகா எங்களிடமிருந்து தனிநாடு கேட்க வேண்டி இருக்கும்.

**ப.திருமாவேலன்**

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

அவலங்களால் மனம் கனத்திருந்தது. உலகம் முழுவதும் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு வெதும்பி எவ்வித்தில் பாதிக்கப்பட்ட மனித குலத்துக்கு உதவி செய்யலாம் என, விரைந்து உதவிக் கொண்டிருந்தது.

தனியார் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் உள்ளுர்த் தொலைபேசி அழைப்புக்காகச் சென்றிருந்தேன். அங்கே வெளிநாட்டுத் தொடர்புக்காக இரு யுவதிகள் வந்திருந்தனர்.

அங்கே 'சண்' தொலைக்காட்சியில தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட அவலங்களை மக்களின் கதறல்களைக் கண்டு அங்கிருந்தோர் அதிர்ச்சியில் உறைந திருந்தனர்.

காட்சிகளுக்கிடையே செய்தி வாசிக்கும் பெண்ணைக் காட்டும் சமயம் வந்தபோது, 'அவவின்ரை சாறின்ரை கலறப்பார்' என்று மற்றவருக்குச் சுட்டிக் காட்டிகேலி செய்தார் ஒரு யுவதி.

விறைத்துப் போய்விட்டேன் இவ்வளவு அவலங்களிலும் செலுத்தாது கவனத்தை சாறியின் கலரில்காட்ட முடிந்தது எப்படி? அநீதிகளைக் கண்டு பொங்கியெழுவதுவும், அவலங்களைக் கண்டு துடித்துதவுவதும் இளம் ரத்தங்களுக்கேயுரிய குணாம்சம்

அவ்வாறானால்...தந்தை செல்வாவின் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்ற கூற்றை நினைப்பதா? யேசு நாதரின் ஆண்டவரே இவர்களை மன்னித்தருளும் என்ற கூற்றை நினைபபதா?

☐ **சங்கர்.**



# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

## ரிஷபம்

ரிஷப ராசி அன்பர்களே நிதானமும், அமைதியும் கொண்ட நீங்கள் கொடுத்த பணியை இழுபறி இல்லாமல் செய்து முடிப்பீர்கள். கடந்த பல ஆண்டுகளாக நீங்கள் பட்ட இன்னலுக்கு விடைகொடுக்கும் காலம். கடந்த ஏழரை ஆண்டு காலமாக உங்களை படாதபாடு படுத்திய சனி பகவான், இந்த ஆண்டு நன்மை தரத் தொடங்குவார். அவரின் ஏழரைச் சனி காலம் வருகிற ஜுன் மாதம் 27 ஆம் திகதியுடன் முடிகிறது. ஆண்டின் தொடக்கத்தில் கேது 6 ஆம் இடத்தில் இருந்து நற்பலனைக் கொடுப்பார். அவர் மூலம் பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். அதேபோல் குருபகவானும் 5 ஆம் இடத்தில் இருந்து குடும்பத்தில் மேன்மை தருவார். மற்றையகிரகங்கள் தொடக்க காலத்தில் சாதகமாக இல்லைத்தான். ராகு உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் இருந்து வீண் அலைச்சலையும், பண விரயத்தையும் உருவாக்குவார். சனிபகவான் 2ஆம் இடத்தில் இருந்து பொருள் கஷ்டத்தையும் குடும்பத்தில் சஞ்சலத்தையும் கொடுத்தார். தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பார்.

இந்த நிலையில் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ராகு-கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்போது தற்போது நன்மை தந்து கொண்டிருக்கும் கேது, 5 ஆம் இடத்துக்கு வந்து நன்மை தரும் இடமான 11 ஆம் இடத்துக்கு மாறுகிறார். அவர் பொருளாதார வளத்தை மேம் படுத்துவார். பொன்னையும், பொருளையும் அளித்து தருவார். இதனை அடுத்து ஜுன் மாதம் 27 ஆம் திகதி சனிப்பெயர்ச்சி வருகிறது. அதன்பின் நாம் ஏற்கனவே கூறியபடி அவர் நன்மை தருவார். அவரது நன்மை மிக மிகத்தானமாக இருக்கும். 3 ஆம் இடமான கடகத்துக்கு சனி சென்ற பின் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க உதவுவார். செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி குருபெயர்ச்சி நிகழ்கிறது. அப்போது குருபகவான் 5 ஆம் இடத்தில் இருந்து 6 ஆம் இடததுக்கு செல்கிறார். இது சுமாரான நிலைதான். அதன்பின் அவரால் நன்மை தர முடியாது. மனதில் ஒருவித தளர்ச்சியை ஏற்படுத்துவார். குருசாதகமற்ற இடத்துக்கு சென்றாலும் அவரது 9 ஆம் இடத்துப்பார்வை சிறப்பாக அமையும். அவர் உங்களுக்கு வரும் எந்த இடையூறையும் முறியடித்து வெற்றிக்கு வழிவகுப்பார். பகைவர்களை இருக்கும் இடம் தெரியாமல் ஆக்குவார்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும் போது, இது சிறப்பான ஆண்டாக அமையும் என்பதை உணரலாம். அந்தவகையில் விரிவான பலனை இப்போது காணலாம்.

இன்னல்களும், இடர்பாடுகளும் இருக்குமிடம் தெரியாமல் மறையும், உங்கள் வாழ்க் கையில் வறண்ட காலம் மறைந்து வசந்த காலம் மலரும், பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தடைப்பட்டு வந்த காரியம் பெப்ரவரிக்குப் பிறகு அனுகூலம் அடையும். ஜுன் மாதத்துக்குப் பிறகு கூடுதல் நன்மைகள் கிடைக்கப் பெறலாம். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். எதிர்ப்புகள் மறையும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உங்கள் செல்வாக்கு உயரும். சுற்றத்தார் உங்களைப் புகழ்ந்து பாராட்டுவார்கள். புதிய சொத்து, வீடு, மனை வாங்க யோகம் உண்டு. புதிய வாகனம் வாங்க யோகம் கைகூடி வரும்.

குடும்பம்: குதூகலம் நிலவும், தம்பதியினரிடையே அன்பும், பாசமும் ஓங்கி நிற்கும், திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தடைப் பட்டு வந்த திருமணம் செப்ரெம்பர் மாதத்துக்குள் கைகூடும். அதுவும் சிறப்பான வரனாகவும் அமையும். குடும்பத்தில் நிலவி வந்த பூசல்கள் செப்ரெம்பர் மாதம் முதல் மறையும். ஏதேதோ காரணத்தால் பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். புதிய வீடு வாங்க நினைப்போர் ஜுன் மாதத்துக்குப் பிறகு தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். சிலர் வசதியான வீட்டுக்கு குடிபுகுவர்.

உத்தியோகம்: குருவின் பலத்தால் சிறப்பான பலனை கண்டு கொண்டிருக்கிறீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் வரும். மேல் அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் ஒத்துழைப்புடன் இருப்பர். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு குரு இடம் மாறினாலும் அவரது பார்வையால் நற்பலனைப் பெறலாம். குறிப்பாக உங்களுக்கு எதிராக யார் சதிவலை பின்னினாலும், அதை எளிதில் முறியடிப்பீர்கள். மேலும் அவர்கள் இருக்குமிடம் தெரியாமல் போய். விடுவர்.

வியாபாரம்: சீராக இருக்கும். அதேநேரம் உங்கள் முயற்சி பல கைகூடாமல் போய் இருக்கலாம். அந்த நிலை மறையும். வியாபாரம் வளர்முகமாக இருக்கும். ஜுன் மாதத்துக்கு பிறகு சனி சாதகமான இடத்துக்கு வருவதால், உன்னத நிலையை அடையலாம். நஷ்டம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. நீண்ட நாட்களாகப் போட்டிருந்த திட்டத்தை நிறைவேற்றலாம். புதிய தொழில் தொடங்கலாம். வேலையின்றி இருப்பவர்கள் கூட, குறைந்த முதலீட்டில் தொழில் ஆரம்பிக்கலாம். வீண் செலவுகள் குறையும். பழைய கடன்கள் அடைபடும். இரும்பு தொடர்பான தொழில் மேம்பாடு காணும். பத்திரிகை தொழில், தானிய வியாபாரம், மளிகை கடை போன்றவை செப்ரெம்பர் மாதத்துக்குள் சிறப்பான நிலையைக் காணலாம். அதன்பின் அந்த தொழில் மோசமான நிலைக்குத் தள்ளப்படமாட்டீர்கள்.

பெண்கள் திருப்தியுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தோடு புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். சிலர் குழந்தை பாக்கியம் பெறுவர். புத்தாடை, அணிகலன்கள் வாங்கலாம். சுயதொழிலில் ஈடுபடும் பெண்கள் உன்னத நிலையை அடைவர்.

வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக் கும். தீர்ப்புகள் உங்களுக்கு சாதகமாக வரும். கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் உங்களுக்கு கிடைக்க வாய்ப்புண்டு. எதிரிகள் சரண் அடையும் நிலை உருவாகும்.

உடல் நலம் சிறப்பு அடையும், பெப்ரவரி மாதத்துக்குப் பிறகு சிறுசிறு உடல்நல பாதிப்புகள் வரலாம். குறிப்பாக பிள்ளைகள் உடல் நலனில் சற்று அக்கறை காட்ட வேண்டிய திருக்கும்.

### பரிகாரம்

ஆண்டின் முற்பகுதியில் சனிபகவானுக்கு பரிகாரம் செய்யுங்கள், பெருமாள் கோவிலுக்குச் சென்று வாருங்கள். ஜுன் மாதம் வரை சனிக்கிழமை அர்ச்சனை செய்து ஊனமுற்றவர்களுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். செப்ரெம்பர் மாதத்துக்கு பிறகு வியாழக்கிழமை தட்சிணா மூர்த்துக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஆசிரியர்கள், குருமார்களுக்கு பணிவிடை செய்யலாம்.

(தொடரும்)

# முல்லைத்தீவில் பேரவலம் தந்த காட்சி






































நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அவசர மனிதாபிமான உதவிக்காக செயலணிக் குழுக்கள் அமைப்பு!

## திட்டமிடல் செயலக கூட்டத்தில் தீர்மானம்



கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்று மாலை 5 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அவசர மனிதாபிமான கூட்டமொன்று இடம் பெறறது.

இந்தக் கூட்டத்தில் வடபகுதியைச் சேர்ந்து அரசாங்க அதிபர்கள், அரசசார்பற்ற உள்ளூர், வெளியூர் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அரசியற் துறைப் பொறுப்பாளர் - தற்போது கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு வழிகளில் அவசர உதவிகள் புரிய வேண்டியுள்ளது. ஒன்று மக்களுக்கான உடனடித் தேவை மற்றையது அவர்களின் வாழ்விடப் பிரச்சினை. இதில் மக்களுக்கான உடனடித் தேவைகளே முதலில் செயற்படுத்தப்படவேண்டியுள்ளது. எனத் தெரிவித்தார்.

இந்த வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவிகளை வழங்குவதற்காக செயலணிக் குழுக்களை அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழுவில் அரசாங்க அதிபர் அல்லது அவரின் பிரதிநிதி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதி ஒருவர் அங்கம் வகிப்பர்.

இந்தச் செயலணிக் குழுக்கள் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குதல் தொடர்பாகவும், மற்றும் மக்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் பணியிலும் ஈடுபடவுள்ளன. இந்தக் கடற்கொந்தளிப்பில் காணாமற்போன, உயிரிழந்தவர்களின் விபரங்களைத் திரட்டுவதே முக்கிய பணியாக இருக்கும்.

யாழ்.மாவட்டத்திற்கான செயலணிக் குழுவின் அலுவலகம் புதுக்காடடுச் சந்தியிலும், முல்லைத தீவிற்கான செயலணிக் குழுவின் அலுவலகம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், இன்று அமைக்கப்பட்டு இதன் செற்பாடுகள் இன்றே தொடங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தென்பகுதி ரயில் சேவைகள் முற்றாகச் சீர்குலைவு!

கடற்கொந்தளிப்பின் காரணமாக தென் கடற்கரையோர ரயில் சேவைகள் அனைத்தும் நேற்று முன்தினத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொது அதிகாரி பிரியால் டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கடற் கொந்தளிப்பு காரணமாக நேற்றுமுன்தினம் நண்பகல் அளவில் பாணந்துறை பீல்வத்த மற்றும் அம்பலாங்கொட ரயில் பாலங்கள் உடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

களனி கங்கையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் களனிக்கான ரயில் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. திருகோணமலையிலிருந்து மாத்தறைக்குச் சென்ற ரயில் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த ரயிலில் பயணம்செய்த பயணிகளைக் காப்பாற்றுவதற்காக விமானப்படை, மற்றும் கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்படடுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவ

# நிபுணத்துவக் குழுக்களை ஐ.நா.சபை அனுப்புகிறது!

(நியூயோர்க்)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும கடற் கொந்தளிப்பால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபை நிபுணத்துவம வாய்ந்த குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள பாரிய மனிதாபிமான உதவிகளிற்கு முதற்கட்டமாகவே ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பதவிகளுக்கும் இணைப்பு அலுவலகம் இழப்பீடுகளை மதிப்பீடு செய்து உதவிகளை ஒருங்கிணைபபதில் நிபுணத்துவம் வாய்ந்த குழு ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் குழுவினா் அவசர மருததுவ, சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல், மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்காலிகக் கூடாரங்களை அமைத்தல் போன்றவற்றை வழங்கவுள்ளனர்.

இதேசமயம் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக ஹெலிகொப்டர்களை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது.

இதேசமயம் கடற் கொந்தளிப்புக் காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக 7.5 மில்லியன் சுவிஸ் பிராங்கினை வழங்குமாறு செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐரோப்பிய யூனியன் வழங்கியுள்ளது.

### சந்திரிகா நாடு திரும்பினார்

(லண்டன்)

பிரிட்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாடு தீரும்பினார்.

ஜனாதிபதி சந்திரிகா நேற்று பிற்பகல் 2 மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 1300 பேரின்...

வானார்கள் என்பது குறித்து இதுவரையல தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் கடலில் மூழ்கி இறந்திருக்க கூடும் என நம்பப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க - பிளாண்டன் பொயின் கடற்படைத்தளத்தில் ஆயுதக் கிடங்கில் இருந்த இராணுவத்தளபாடங்கள் யாவும் கடலினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிண்ணியா பிரதேசத்திற்கு சென்ற விடுதலைப் புலிகளின் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை தலைமையிலான குழுவினா் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குப் பெருந்தொகையான உலர் உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், பாய்கள் மற்றும் அவசியமான பொருட்களை வழங்கியுள்ளனர். (10,04)

## உயிரிழந்தோர்..

பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் உயிரிழந்தோர் தொகை 20 ஆயிரமாக அதிகரிக்கலாம் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மதிப்பீடுகளின்படி 13,390 பேர் உயிரிழந்திருப்பது உறுதிசெயயப்பட்டுள்ளது. தொடர்ந்து சடலங்கள் மீட்கப்பட்டுவருவதால் இந்தத் தொகை அதிகரிக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதியில் மனிதச் சடலங்கள், இறந்த கால்நடைகள் அழுகிக் கிடப்பதால் எங்கும் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளன.

இதனால் சடலங்களைப் பெரும் புதைகுழியில் போட்டு அடக்கம் செயயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

உடுத்துறை, புதுக்குடியிருப்பு பகுதிகளில் நூற்றுக்கணக்கான சட்லங்கள் ஒரே குழியில் போட்டு அடக்கம செய்யப்பட்டன. தொடர்ந்து இன்றும் இந்தப்பணி இடம்பெறவுள்ளது.

### அள்ளி வழங்கி ஆதரியுங்கள்

கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் இழப்புகள் - அழிவுகளின் மத்தியில் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனம் - ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள்.

உங்கள் கைதிறக்கட்டும்
ஈகை சிறக்கட்டும்.

உங்களின் நிதி உதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள். கருணையுணர்வோடு மட்டுமல்ல. கடமையுணர்வோடு உதவுங்கள்...!

# 150 மருத்துவ மாணவர்கள் அவசர உதவிப் பணிகளில்!

(யாழ்ப்பாணம்)

கடற் கொந்தளிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு அவசர மனிதாபிமான மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினைச் சேர்ந்த 150 மருத்துவ மாணவர்கள் அடங்கிய குழு ஒன்று சென்றுள்ளது.

இவர்களில் 70 பேர் கடற்கொந்தளிப்பினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கும் 50 பேர் திருகோணமலை மாவட்டத்திற்கும், 30 பேர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் சென்றுள்ளனர்.

## இயற்கையின்...

தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

2 ஆம் லெப்ரினன்ட் செல்வரூபன் என்று அழைக்கப்படும் யாழ். கச்சேரியடியைச் சொந்த முகவரியாகவும், பிள்ளையார் கோவில் அருகாமை சாந்தபுரம் கிளிநொச்சியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட செல்வநாயகம் செல்வரூபன் - 26.12.2004 அன்று உடுத்துறைப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அணர்த்தத்தில் லெப்ரினன்ட் அமுதரூபி என அழைக்கப்படும் யாழ். உடுத்துறை வடக்கு தாளையடியைச் சேர்ந்த தவராசதுரை - வாகினி என்ற போராளி சாவடைந்துள்ளார்.

24.12.2004 அன்று பயிற்சியின் போது வீரவேங்கை உலகச்சோழன் என்று அழைக்கப்படும் 3 ஆம் கண்டம் இடதுகரை முத்தையன்கட்டைச் சேர்ந்த யோசப் உதயகுமார் என்ற போராளி சாவடைந்துள்ளார்.

இந்த மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## நூற்றுக்கணக்கான...

மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் பருத்தித் துறையிலிருந்து தெற்கில் காலிப் பிரதேசம் வரை கடல் நீரில் அகப்பட்டு படையினரில் 64 பேர் காணாமற்போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக காலி தக்சின கடற்படை முகாம் முற்றாக அழிந்துள்ளதாகவும் பராக்கிரம தாக்குதல் கப்பல் மற்றும் 820 இலக்கமுடைய பொருட்களை ஏற்றியிறக்கும் எல்.ரி.எம். கப்பல் என்பன கடும் சேதத்திற்குள்ளாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் திருமலை கடற்படைத் தளம், கிழக்கின் இராணுவ மற்றும் கடற்படை முகாமிலிருந்த படகுகளும் கடும் சேதத்திற்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை கடற்படை முகாமல் கடற்கொந்தளிப்பில் அகப்பட்டு துறைமுகத்தின் பாதுகாப்பு அதிகாரி லெப்.கொமாண்டர் சில்வா உட்பட கடற்படையினர் 9 பேர் பலியாகினர்.

திருமலை நிலாவெளி கடற்படை முகாமும் முற்றிலுமாக அழிநதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## நூற்றுக்கணக்கான சடலங்கள்...

விடுதலைப் புலிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கிலுள்ள மணறகாடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பொற்பதி, குடத்தனை, நாகர்கோவில், செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆகிய அனைத்து கிராமங்களும் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து பளைப் பிரதேசத்தில் பாடசாலைகளிலும், தேவாலையங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த அனர்த்தங்களால் காயமடைந்த சுமார் 600 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும், சாவகச்சேரி, யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்திலும் மீட்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. நேற்று மாலை வரை 800 சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காணப்படாத 624 சடலங்கள் புதைக்கப்பட்டன.

இந்த மீட்பு நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் போராளிகளும், தொண்டர்களும் ஈடுபட்டுள்ள அதேவேளை, மக்கள் எவரும் அந்தப் பகுதிக்குள் அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளில் சடலங்கள் தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருவதனாலும், தொற்று நோய்கள் பரவும் சாத்தியங்கள் உள்ளதனாலுமே மக்கள் அனுமதிக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்றுவரை 1600 என உறுதிப்படுத்தப்பட்டது. ஆனாலும் தொடர்ந்தும் சடலங்கள் மீட்கப்பட்டு வருவதனால் இது மேலும் அதிகரிக்கப்படுவதனால் இது மேலும் அதிகரிக்கப்படுமென அஞ்சப்படுகிறது.

இதேவேளை தமது மாவட்டத்தில் 25000 இற்கும் மேற்பட்டவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

12,14,122)

2004 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

Diploma in Visualize Management

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS Word, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.



காலம் 3 மாதங்கள்

பிரிவு II ஆரம்பம் 05.01.2005

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.